Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழ்த் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி- 16 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 றஜபு 26 (01.09.2005) வியாழக்கிழமை இதழ்:333

மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்

முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை



குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை,
கிளிநொச்சி.

# கிளிநொச்சி நகரில் இன்று தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு!





கிளிநொச்சி —

வவுனியாவில் கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட தமிழீழ தேசியப் பிரகடனத்தை சர்வ தேச சமூகம் அங்கீகரிக்க வேண்டுமெனக் கோரி இன்று கிளிநொச்சி பொது மைதானத்தில் தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வு நடைபெறவுள்ளது.

இன்று மாலை 4 மணிக்கு கிளிநொச்சி பொதுமைதானத்தில் நடைபெற வுள்ள எழுச்சி நிகழ்வுக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியடைந்துள்ள நிலை யில் கிளிநொச்சி நகரம் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

இன்றைய இந்த எழுச்சி நிகழ்வில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ...ி உறுப்பினர்கள் ஐவர் ...டையினரால் கைது!

...காணமலை —

...ருகோணமலை - கந்தளாயில் வைத்து ...தலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ...ரைத் தாம் கைதுசெய்திருப்பதாக படையி... ...தெரிவித்தனர்.

...ானகுரு மோகனதாஸ், காசுபதி நல்ல... ...ானகுரு சத்தியசீலன், சுமணதாஸ ...மஸ், ஞானரட்ணம் சுதாகரன் ஆகி... ...கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர் ...ிச்சென்ற ஓட்டோ சாரதிகளான கிருஷ் ...பக்குமார், மொகமட் அப்துல் நசூர் ...யும் படையினர் கைதுசெய்தனர்.

## ...மதாஸ கொலை: ...ந்தேக நபர்களும் ...ன்றால் விடுதலை!

...னாள் ஜனாதிபதி பிரேமதாஸவின் ...யுடன் சம்பந்தப்பட்டதாக வழக்குத் ...ப்பட்ட 21 பேரை கொழும்பு நீதிவான் ...றம் நேற்று விடுதலை செய்தது. ... சுமத்தப்பட்டவர்களில் ஒருவர் ...வராவார். ஏனையோர் தமிழர்கள். ...வர்களுக்கு எதிராகப் போதிய சாட்சிகள் ...ை என்ற அடிப்படையில் வழக்கைத் ...முடியவில்லை (12 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிளில் சென்ற வயோதிபரை பொலிஸார் மறித்ததால் மாரடைப்பு ஏற்பட்டு பரிதாப மரணம்!



யாழ்ப்பாணம் —

மோட்டார் சைக்கிளில் நல்லூர் கந்தன் ஆலயத்துக்குச் சென்றுகொண்டிருந்த வயோதிபர் ஒருவர் - திருநெல்வேலி சந்திப் பகுதியில் - போக்குவரத்துப் பொலிஸார் மறித்துச் சோத னையிட முற்பட்டபோது - திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் உயிரிழந் தார்.

நேற்றுமாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம் பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் (வயது 65) என்ற வயோதிபர் தனது வீட்டிலிருந்து (12 ஆம் பக்கம் பார்க்க)

## தெஹிவளையில் பாரிய தேடுதல் 28 தமிழ் இளைஞர்கள் கைது!

கொழும்பு —

கொழும்பு - தெஹிவளைப் பகுதியில் இராணு வத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று முன்தினம் இரவு நடத்திய பாரிய சுற்றிவளைப் பில் சந்தேகத்தின் பேரில் 28 அப்பாவித்தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை நிகழ்ந்த இந்தத் தேடுதல் நடவடிக்கையில் -

பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட் பக் கல்லூரி மாணவர்கள், வெளிநாடு செல்ல வந்தவர்கள் ஆகியோரரே கைது செய்யப்பட்டவர் களாவர்.

வீடுகள், தங்குமிடங்கள், கடைகள் ஆகிய வற்றில் இருந்தவர்களும் வீதிகளில் சென்றவர் களுமே தேடுதல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தம்மாலோக தேரர் ரணிலுக்கு ஆதரவு!

கொழும்பு —

ஜாதிக ஹெலஉறுமய நாடாளுமன்ற உறுப்பினர் வண. உடுவே தம்மாலோக தேரர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட் பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக பிரசாரம் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர் ஐ.தே.க. தலைவர் மலிக் சமர விக் கிரமவுடன் பல்வேறு பேச்சுக்களை நடத்தி யிருப்பதாகவும் - இவர் தனது நிலைப்பாட்டை விரைவில் வெளியிடவிருப்பதாகவும் தகவல் கள் தெரிவிக்கின்றன.

## காணாமற்போன இளைஞர் சடலமாகக் கண்டுபிடிப்பு!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச் சேனை பிரதேசத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து இனந்தெரியாதோரால் அழைத்துச்செல்லப்பட்டு காணாமற்போன இளைஞர் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் வாகனேரியில் கண்டெடுக்கப்பட்டது.

புனானை - முள்ளிவெட்டுவான் வாசியான செல்லத்துரை சுரேஷ் (வயது 28) என்பவரே சட லமாக மீட்கப்பட்டதாக அடையாளம் காணப்பட் டது.

வாகனேரி காட்டுப் பகுதியில் வாய்க்கால் ஓரத்தில் துர்நாற்றம் (12 ஆம் பக்கம் பார்க்க)

யுடன் சம்பந்தப்பட்டதாக வழக்குத்
பட்ட 21 பேரை கொழும்பு நீதிவான்
றம் நேற்று விடுதலை செய்தது.
சுமத்தப்பட்டவர்களில் ஒருவர்
ாவராவார். ஏனையோர் தமிழர்கள்.
வர்களுக்கு எதிராகப் போதிய சாட்சிகள்
லை என்ற அடிப்படையில் வழக்கைத்
ர முடியவில்லை (12 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பு

கொழும்பு - தெஹிவளைப் பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நேற்று முன்தினம் இரவு நடத்திய பாரிய சுற்றிவளைப்பில் சந்தேகத்தின் பேரில் 28 அப்பாவித்தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை 6 மணிமுதல் இரவு 8 மணிவரை நிகழ்ந்த இந்தத் தேடுதல் நடவடிக்கையில் -

பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், வெளிநாடு செல்ல வந்தவர்கள் ஆகியோரரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

வீடுகள், தங்குமிடங்கள், கடைகள் ஆகியவற்றில் இருந்தவர்களும் வீதிகளில் சென்றவர்களுமே தேடுதல் (12 ஆம் பக்கம் பார்க்க)

நிலையில் வாகனேரியில் கண்டெடுக்கப்பட்டது.

புனானை - முள்ளிவெட்டுவான் வாசியான செல்லத்துரை சுரேஷ் (வயது 28) என்பவரே சடலமாக மீட்கப்பட்டதாக அடையாளம் காணப்பட்டது.

வாகனேரி காட்டுப் பகுதியில் வாய்க்கால் ஓரத்தில் துர்நாற்றம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# ட்டக்களப்பில் தொடர் தாக்குதல்; படையினர், 1 பொலிஸார் காயம்!

களப்பு

ட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு வெவ்
இடங்களில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு
ம் கைக்குண்டுத் தாக்குதல்களில் 4 படை
பொலிஸார், 1 சிவிலியன் உட்பட 6
டைந்தனர்.
தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்
தாக்கதல் தொடர்பாக மேலும் தெரிய
து-
களப்பு - வாழைச்சேனை வீதி மாவடி
வேம்பு இராணுவ காவலரண் மீது நேற்றுக் காலை 6.15 மணியளவில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இரண்டு இளைஞர்கள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்தனர்.

நிமால் ஜெயதிலக(வயது38), எஸ்.எம்.கே. விஜேரத்ன(வயது 36) ஆகிய படையினரே காயமடைந்தவர்களாவர்.

மற்றொரு சம்பவத்தில் காலை 7 மணியளவில் வாழைச்சேனை (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாடு கடத்துவதை கண்டித்து ஜேர்மனியில் ஆர்ப்பாட்டம்!




பேர்ளின்

அகதி அந்தஸ்துக் கோரிய தமிழர்களை திருப்பி அனுப்புவதை நிறுத்தக் கோரி ஜேர்மனி - பிறேமன் நகரில் நேற்று முன்தினம் கண்டனப் போராட் டம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட தமிழ்மக்கள் பெரிய அளவிலான திரையில் கோரிக்கைகள் எழுதப்பட்டிருந்த பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

தேர்தல் பிரசாரத்துக்காக பிறேமன் நகரத்திற்கு வந்த அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சரிடம் -இலங்கை அரசால் அவசரகாலச் சட் டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள வேளையிலும் அரசியல் தஞ்சம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# த்வத்தவின் பாதுகாப்புக் குறித்து க்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு!

் பிரதி பாதுகாப்பு அமைச்சர் ஜென
ரத்வத்தவின் பாதுகாப்புத் தொடர்
யாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு
த்தரவிட்டது.
வின்ன படுகொலைச் சம்பவம்
விசாரணைகளை மேற்கொண்டு
நீதிபதிகள் அடங்கிய குழுவே
நேற்று முன்தினம் பொலிஸ் மா அதிபருக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

ஜெனரல் ரத்வத்தவின் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதால் இந்த வழக்கு விசாரணைக்கு அவர் வராது விட அனுமதிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளையடுத்தே நீதிபதிகள் குழு இந்த உத்தரவைப் பிறப்பித்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழுத் தலைவர் மன்னாரில் புலிகளுடன் சந்திப்பு!

மன்னார்

மன்னார் மாவட்ட அரசியற்துறையினருக்கும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்றுமாலை 3.30 மணியளவில் மன்னார் மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - விடுதலைப் புலிகள் சார்பாக - மன்னார் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன், துணைப் பொறுப்பாளர் அருந்தவம், மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் நிலவரசி ஆகியோரும் -

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு சார்பில் அதன் தலைவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டாக்காலி நாய்கள் பிடிப்பு!

காரைநகர் பகுதியிலுள்ள தோப்புக்காடு முதல் வலந்தலைச்சந்தி வரை இன்றும், நீலங்காடு முதல் வலந்தலைச் சந்திவரை நாளையும் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன.

எனவே இந்த இரண்டு நாட்களிலும் பொதுமக்கள் தமது வளர்ப்பு நாய்களை கட்டி வைக்குமாறு காரைநகர் பொது சுகாதார பரிசோதகர் எஸ்.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி.ஞானேஸ்வரி கணேசலிங்கம்



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும், சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி.ஞானேஸ்வரி - கணேசலிங்கம் அவர்கள் 30.08.2005 செவ்வாய்க் கிழமை இரவு கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி நவரத்தினம் - சரஸ்வதி தம்பதி களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான திரு.திருமதி இராசரத்தினம் - பர மேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், திரு.கணேசலிங்கம் (Product manager இளந்தென்றல் வாணிபம் கிளிநொச்சி) அவர்களின் அன்பு மனைவியும், பாமினி ,சுகந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவராஜேஸ்வரி, காலஞ்சென்ற இலங்கை நாதன், இரத்தினேஸ்வரி, சிவனேஸ்வரி, சற்குணநாதன் (Printing manager Lake House), பரமநாதன் (J.P, நிறைஞ் சனாஸ், நாதன்ஸ் சினிமா உரிமையாளர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிவராஜேஸ்வரன், நாகபூஷணி, சிவானந்தன் (மகாராஜா நிறுவனம்), நவரத்தினம் (ஏல விற் பனையாளர்), விஜயகுமாரி (அவுஸ்ரேலியா), யசோதரா, கமலா தேவி, தேவஞானி, கோமளவல்லி, சபாலிங்கம் (ஜேர்மனி), சங்கரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (01.09.2005) வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு மன்னம் பெரி மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு இறு திக்கிரியைகள் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

நிறைஞ்சனாஸ்,
204 பொன்னாலை வீதி,
சங்கானை.

தகவல்
திரு.ந.பரமநாதன்
சகோதரன் (J.P)

(சி.4555)

# இலங்கையின் ஒற்றை ஆட்சி அரசியலின் கீ
# தமிழரின் எவ்வித பிரச்சினைக்கும் தீர்வில்ல

## கஜேந்திரன் எம்.பி தெரிவி

யாழ்ப்பாணம்—

இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்புக்குள் நின்று கொண்டு தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு மட்டுமல்ல அன்றா டாப்பிரச்சினைக்குக் கூட தீர்வு காண முடியாதென்பது நிரூபிக்கப்பட்டுள் ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் இன்று கிளிநொச்சி யில் நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன மாநாடு தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித் துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த மாதம் வவுனியாவில் நடை பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரக டன நிகழ்வில் கலந்து கொண்ட பேரா ளர்களால் வலியுறுத்தப்பட்ட கருத்துக் களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக இன்று கிளிநொச்சியில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு நடைபெறவுள்ளது.

கடந்த மூன்றரை ஆண்டுகளாக தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளால் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாகவும், அன்றாடப் பிரச் சினைகள் தொடர்பாகவும் சிங்கள தேசத்தின்முன் வைக்கப்பட்ட நியாய மான கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

சிங்களப் பேரினவாதம் தாமாக தமிழர் மீது இரக்கம் கொண்டு அர சியல் உரிமைகள் எதனையும் தரப் போவதில்லை. சர்வதேச சமூகம் சிங் களப் பேரினவாதத்தின் முகங்களை ஓரவுக்குப்புரிந்துகொண்டுள்ளநிலையில்

தமிழ் மக்களாகிய நாம் அனை வரும் ஒன்றுதிரண்டு ஓரணியாக நின்று சர்வதேச சமூகத்திற்கு எமது கோரிக்கைகளை வலியுறுத்து

தமிழ் மக்களாகிய நாம் எம நிர்ணய உரிமையோடு எமது வழித்தாயகத்தில் தனித்தேசிய மாக வாழ விரும்புகிறோம். இந்த நிலைப்பாட்டையும், எமது லைப் போராட்டத்தையும், சர்வ சமூகம் அங்கீகரிக்க வேண்டும். மூலம் நிரந்தர அமைதித்தீர்வு ஏ சர்வதேச சமூகம் ஒத்துழைக்க வே டும் என வலியுறுத்துவதற்கா அனைத்து மக்களையும் அ யணியாக திரண்டு வருமாறு அ டன் வேண்டுகின்றேன் எனத் தெ விக்கப்பட்டுள்ளது.

## மாநகர ஆணையாளராக சி.வி.கே. சிவஞானம் நியமனம்

யாழ்ப்பாணம்—

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் யாழ்.மாநாகரசபைக்கு சி.வி.கே.சிவஞானம் ஆணையாள ராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போதைய மாநகரசபை ஆணையாளராக உள்ள கலாநிதி க.குணராசா வடக்கு கிழக்கு மாகா ணசபைக்கு இடமாற்றம் செய்யப்பட் டுள்ளதை அடுத்தே புதிய ஆணை யாளராக. சி.வி.கே.சிவஞானம் நிய மிக்கப்பட்டுள்ளார்.

புதிய மாநகர ஆணையாளர் எதிர்வரும் ஐந்தாம் திகதி தமது கடமையைப் பொறுப்பேற்கவுள்ளார். இவர் முன்னரும் மாநகரசபை ஆணையாளராக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்

### அன்னலிங்கம் - தெய்வேந்திர



வண்ணார் பண்ணை முருகமூர்த்தி வீதி பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அன் லிங்கம் - தெய்வேந்திரம் நேற்று 31.08.200 காலமானார். அன்னார் காலஞ்சென்ற அன் லிங்கம், ராசம்மா தம்பதிகளின் அன்பு மக காலஞ்சென்ற குமரையா மற்றும் இரத்தினம் பதிகளின் மருமகனும், இரஞ்சித வானியின் அ கணவரும், சுஜித்தா, நகுலேஸ்வரன்(சுகந்தன் சிவில் இஞ்சினி லதா, கவிதா, ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவா. அன்ன இறுதிக் கிரியைகள் 01.09.2005 இன்று அன்னாரின் இல்லத்தில் பெற்று பி.ப. 4.00 மணியளவில் தகனக்கிரியைக்கக கோம் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படுப் இவ் அ தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏ கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

முருகமூர்த்தி வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவ
தெ.நகுலேஸ்வர (சுகந்தன்

(2032)


நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)



சத்தியராஜ், வடிவேல், நமீதா நடித்த நகைச்சுவை நிறைந்த திரைப்படம்

இங்கிலீஷ்காரன்

நிறைஞ்சனாஸ் சங்கானை

காதல் புகழ் பரத், ரேணுகாமேனன் நடித்த



பெப்ரவரி 14

காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

இன்றுமுதல்
டொல்பி ஒலிநயத்துடன்
விக்ரம், சதா,விவேக் மற்றும் பலர் நடித்த



அந்நியன்

காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்

ஜெயம் ரவி,ரேணுகாமேனன், வடிவேல் மற்றும் பலர் நடித்த



தாஸ்

(இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு)
அடுத்த வெளியீடு:-
09.09.2005 முதல்
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த
தொட்டி ஜெயா

காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 5.30, 9.30

ராஜா யாழ்ப்பாணம்

இன்றுமட்டும் ஷாம்,அஸின், பூஜா, லைலா மற்றும் பலர் நடித்த



உள்ளம் கேட்குமே

2.09.2005 முதல் சுரேஸ்கோபி நடித்த

பத்ரம்

பு.நே: 10.30, 2.30, 6.30, 9.30


## சாவகச்சேரி நகர அபிவிருத்திப் பணிகள் கலந்துரையாடலின்பின் ஆரம்பிக்கப்படும்

### அரசாங்க அதிபர் கே.கணேஸ்

யாழ்ப்பாணம்—

சாவகச்சேரி நகர மக்கள் மற்றும் அந்த நகர அபி விருத்தி தொடர்புடையவர்களுடன் கலந்தாலோசித்தே சாவகச்சேரி நகரின் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக் கப்படும் என அரசாங்க அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

இந்த நகர அபிவிருத்தி தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரி நகரம் அபிவிருத் திக்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. இந்தநகர அபிவிருத்தி சம்பந்தமான வரைபு நகர அபிவிருத்தி அதிகார சபையி டம் இருந்து கிடைக்கப்பெற்றதும் அந்தத் திட்டவரைபு தொடர்பாக ஆராயப்படும்.

மேலும் இந்த நகரின் அபிவிருத்தியில் நகர மக்கள் மற்றும் சாவகச்சேரி நகரில் அக்கறையுள்ள நிறுவனங் களின் பங்களிப்பு மிக அவசியம். இவர்களுடன் கலந் தாலோசிக்கப்பட்டே இந்த நகரின் அபிவிருத்தி வேலை கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நண்பகல் 12 மணிக்குப் பின்னர் போக்குவரத்தை தவிர்க்கவும்!

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறவுள்ள தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வுக்கு கிளிநொச்சி மற்றும் ஏனைய மாவட்டங்களி லிருந்து பெருமளவில் மக்கள் கலந்து கொள்ளவுள்ளதால் பகல் 12 மணி தொடக்கம் கிளிநொச்சி நகரம் மற்றும் ஏ-9 பிரதான வீதியில் மக்கள் கூட்டம் அதிகரிப்பதற்கான வாய்ப் புள்ளது.


இதன் கரணமாக நண்பகல் 12 மணிக்குப் பின்னர் கிளிநொச்சி நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் ஏ-9 வீதியூடான போக்குவரத் துக்கள்யாவும் இடம்பெற மாட்டாது எனவும், இதன் காரணமாக நண்பகல் 12 மணிக் குப் பின்னர் கிளிநொச்சியூடாக பயணங்களை மேற்கொள் பவர்கள் அதற்கமைய தமது பயண ஏற்பாடுகளை மேற் கொள்ளுமாறு தமிழ்த் தேசிய எழுச்சிப்பிரகடன செயலணிக் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## நல்லூரில் இன்று


வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, மாலை 5.30 மணிக்கு சப் பறத்திருவிழாவும், தொடர்ந்து நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தி ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு வி.சிவஞானசேகரத்தின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

இந்தநிகழ்வில் - வயலின் - எம்.விஸ்வமூர்த்தி, மிரு தங்கம்-என்.கஜன், முகர்சிங் - எஸ்.விமல்சங்கர் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (100)


NAVAHALA metropolit



Canon IR 1600





யாழ்.மண்ணில் முதல் தடவையாக. கலர் நிழல் படப் பிரதியியந்திரத்தை அறிமுகப்படுத்துவதில் பெருமையடைகின்றோம்.

Canon IR 3100C

உங்களது அலுவலக
தேவையான
தொ
வலையமைப்புக்களை
கொள்

Canon - மல்டி மீடியா புறோஜெக்ரர்





Acer - மல்டி மீடியா புறோஜெக்ரர்

குறைந்த விலையில் யாழ்.மண்
நாடவேண்டிய இடம்

NAVAHALA

01. அனைத்துவகையான Canon Photo Copier Machine
களுக்குத் தேவையான உதிரிப்பாகம் Toner களைப்பெற்றுக்கொ
02. விற்பனைக்குப் பிந்திய தொழில்நுட்ப சேவை.
03. விற்பனைக்குப் பிந்திய உத்தரவாதம்.

Metropolitan Agent
200, K.K.S.Road.
Jaffna.

021 - 2225461
021 - 2225462

# கொழும்பு நடவடிக்கை தளபதியை இராணுவத் தளபதியே நீக்கினார்!

## தனக்கு எதுவும் தெரியாதென்கிறார் சந்தகிரி



கொழும்பு —

கொழும்பு நகர நடவடிக்கைகளுக்கான கட்டளைத் தளபதியாகப் பணிபுரிந்த மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தன திடீரென அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதற்கும், தமக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்றும், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொடவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாகவும் கூட்டுப் படைகளின் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியின் உத்தரவின் பேரில், மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தன திடீரென பதவி நீக்கப்பட்டதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. இது குறித்து கருத்து வெளியிட்ட வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி -

இந்தச் சம்பவத்துக்கும் எனக்கும் தொடர்பு இல்லை. இராணுவத் தளபதியே இந்த நடவடிக்கையை மேற்கொண்டார். இராணுவத் தளபதி தொடர்பான விவகாரங்களில் இராணுவத் தளபதி பூரண அதிகாரங்களுடன் செயற்படுகிறார். அவரது கைகள் எதுவும் கட்டப்பட்டிருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தத் திடீர் இடமாற்றம் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட எந்தவித தகவலையும் வழங்கவில்லை என்றும் பாதுகாப்பு உயரதிகாரிகள் தெரிவித்தனர்.


கொழும்பு நகரப் பாதுகாப்பு தொடர்பான திட்டம் ஒன்றைத் தயாரித்து தரும்படி - வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, மேஜர் ஜெனரல் வஜிர விஜேகுணவர்த்தனவிடம் கேட்டிருந்தார்.

இதற்கான நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டிருந்தபோதே, காரணம் எதுவும் கூறப்படாமல் பதவி நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை இந்தப் பதவி நீக்கத்துக்கான காரணம் எதுவும் கூறப்படாததுடன், எந்தப் பதவியும் வழங்கப்படவில்லை. ஆயினும் பலாங்கொட 11 ஆவது டிவிசனின் தளபதியாக இவர் நியமிக்கப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# பேச்சுக்கான இடம் பற்றி இதுவரை முடிவு இல்லை

## விதார் ஹெல்கிசன் தெரிவிப்பு



கொழும்பு —

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை நடத்தும் இடத்தைத் தெரிவு செய்வது தொடர்பாக இரண்டு தரப்பினருடனும் பேச்சுக்கள் நடத்தப்படுவதாகவும் - இது தொடர்பாக இன்னமும் இணக்கம் காணப்படவில்லை என்றும் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தெரிவித்தார்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருப்பதால் - சமாதான முயற்சிகள் பாதிக்கப்படுமா என்பது குறித்து தான் கருத்து எதனையும் வெளியிட முடியாதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனிடையே - நோர்வே விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இந்த வாரத்தில் இலங்கை வருவது தொடர்பான திட்டம் எதுவும் இல்லை என்று நோர்வே தூதரகப் பேச்சாளர் டோம்க்னாப்ஸ்கக் தெரிவித்தார்.

# சீனாவில் இருந்து திரும்பியதும் சந்திரிகா அமெரிக்கா செல்கிறார்



கொழும்பு —

சீனாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி சந்திரிகா தனது பயணத்தை நிறைவுசெய்து நாடு திரும்பியதும், அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதிவரை அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஐ.நா சபையின் வருடாந்த அமர்வு நடைபெறும் வேளை ஜனாதிபதி பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ஐ.நாவின் வருடாந்த கூட்டத் தொடரில் எதிர்வரும் 15 ஆம் திகதி பங்கேற்கும் ஜனாதிபதி சந்திரிகா அங்கு விசேட உரை நிகழ்த்தவுள்ளார்.

இலங்கையின் சமாதான செயற்பாடு, தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும் ஜனாதிபதி தனதுரையில் கவனம் செலுத்துவாரெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவின் அமெரிக்க விஜயத்தின்போது ஜனாதிபதி புஷ்ஷையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவும் செல்லவுள்ளார். (தே)

# ஜனாதிபதி தேர்தலுக்கு முன் ஐ.தே.கட்சி விசேட மாநாடு!

கொழும்பு —


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் விசேட மாநாடொன்றை எதிர்வரும் 17 ஆம் திகதி கொழும்பு மாநகரசபை மைதானத்தில் நடத்த ஐ.தே. கட்சி தீர்மானித்துள்ளது.

ஐ.தே.கட்சியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடந்த கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக ஐ.தே. கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக பிரசார நடவடிக்கைகள் மற்றும் மக்கள் சந்திப்புகளை ஏற்பாடு செய்வது தொடர்பாக நேற்று முன்தினம் ஐ.தே.கட்சி கலந்துரையாடல்களை நடத்தியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு 90 இலிருந்து 100 வரையான பிரசாரக் கூட்டங்களை நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கூட்டமைப்பு எம்பிக்களுடன் தமிழ்ச்செல்வன் சந்திப்பு!



கிளிநொச்சி —

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே அடுத்தவாரம் சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள், நகர்வுகள் தொடர்பாக ஆராயப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கையில் -

போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பாக அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெறவுள்ள பேச்சுவார்த்தை பற்றியும், தற்போது தென்பகுதியில் நிலவுகின்ற அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் குறிப்பாக ஜனாதிபதி தேர்தல் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பு அடுத்தவாரம் கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விஞ்ஞான பாடங்கள் மூன்றில் சித்தியடைந்தால் தாதியர் நியமனம்

கொழும்பு —

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் விஞ்ஞான பாடங்கள் மூன்றில் சித்தியடைந்தால், அவர்களுக்கு புள்ளிகளின் அடிப்படையில் இல்லாமல் தாதியர் நியமனங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் மூன்று வருடங்களில் 10 ஆயிரம் தாதியர்களை சேவையில் இணைத்துக்கொள்வதற்கு அமைய, விஞ்ஞான பாடங்கள் மூன்றில் சித்தியடைந்த மாணவர்களுக்குத் தாதியர் நியமனங்களை வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி.சில்வா தெரிவித்தார்.

முன்னர் இசற் புள்ளிகளின் அடிப்படையிலேயே தாதியர் சேவைக்கான நியமனங்கள் இடம்பெற்றன.

இந்த வருடத்திலிருந்து அந்த முறை மாற்றப்பட்டு, விஞ்ஞான பாடத்துக்கான மூன்று பாடங்களில் சித்தியடைந்த மாணவர்களை தாதியர்களாக இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருடம் 5 ஆயிரம் தாதியர்களை சேவையில் இணைக்கத் திட்டமிட்டபோதிலும், 4,100 பேர் மாத்திரமே விண்ணப்பித்திருந்தனர். எனவே முன்னர் இருந்த கட்டுப்பாடுகளை தளர்த்தத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# பொலிஸ் அதிகாரிகள் பற்றாக்குறை தேர்தலில் நெருக்கடியை ஏற்படுத்தும்

## பிரதிப் பொலிஸ் மா அதிபர் தகவல்

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேவையான பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துவதற்கு- 100 பொலிஸ் நிலையங்களுக்கு பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இல்லாமை, தேர்தல் கடமைக்கு மிகப் பெரிய தடையாக அமையுமென - சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண தெரிவித்தார்.

பொலிஸ் நிலையங்களுக்கு நிரந்தர பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்படாமையால் பல விதமான நெருக்கடிகள் தோன்றலாம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் நியமனங்கள் ஏற்கப்பட்ட பின்னர், பொலிஸ் உத்தியோகத்தர்களை இடத்திற்கு இடம் மாற்ற இயலாது. அவ்வாறு பொலிஸாரை இடம் மாற்றினால், அது அரசியல் காரணங்களுக்காக மாற்றப்படுவதாக அர்த்தப்படும்.

எனவே, தற்போது நிரந்தரமாக பொலிஸ் பொறுப்பதிகாரிகள் இல்லாத அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும், பொலிஸ் அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# 930 மில்லியன் ரூபா நிதியை தேர்தலுக்கு ஒதுக்க கோரிக்கை

கொழும்பு —

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடிப்பதற்காக 930 மில்லியன் ரூபாவை ஒதுக்கித் தருமாறு, தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க திறைசேரியிடம் எழுத்து மூலம் கோரியுள்ளார்.

இதேவேளை, தேர்தல் ஆணையாளர் கடந்த திங்கட்கிழமை உதவித்தேர்தல் ஆணையாளர்களைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு சுமார் மூன்று மணி நேரம் இடம்பெற்றது.

இதன்போது தேர்தல் நடத்துவதற்குரிய ஒழுங்குகள், அமைக்க வேண்டிய வாக்குச் சாவடிகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# காமினி கொலை குறித்த ஆவணங்கள் அழிப்பு!


கொழும்பு —

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக தொட்டலங்க ஐ.தே.கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிக் கொண்டிருந்தவேளை - காமினி திஸநாயக்க குண்டுவெடிப்பில் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக, சட்டமா அதிபர் திணைக்களத்தால் நடத்தப்பட்ட வழக்குத் தொடர்பான ஆவணங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் இரகசியப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலை தொடர்பாக மேலும் வழக்கைத் தொடர்வது அவசியமற்றதென, சட்டமா அதிபரின் சார்பாகப் பொலிஸாரிடம் ஜெனரல் டி.ஆர்.டிசில்வா தமக்குத் தெரிவித்துள்ளதாக இரகசியப் பொலிஸார் கொழும்பு மேலதிக நீதிவான் செல்வி அமாலி ரணவீரவுக்குத் தெரிவித்தனர்.

இந்தஆவணங்கள் அழிக்கப்பட்டமை தொடர்பாக இதுவரை சந்தேக நபர் எவரும் கைது செய்யப்படவில்லை. சமர்ப்பிக்கப்பட்ட விடயங்களைக் கவனத்திலெடுத்த நீதிவான், சம்பந்தப்பட்ட ஆவணங்களை மூடிவிடுமாறு உத்தரவிட்டார். (தே)

# 88 ஓட்டங்களால் பங்களாதேஷை இலங்கை அணி தோற்கடித்தது!



கொழும்பு—

கொழும்பில் நேற்று தொடங்கிய இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டித் தொடரின் முதல் ஆட்டத்தில் இலங்கை அணி 88 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பங்களாதேஷ் அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடுமாறு இலங்கை அணியைக் கேட்டுக்கொண்டது.


இதையடுத்து தரங்கவும் - ஜெயசூரியவும் களமிறங்கினர். தொடக்கத்தில் விளாசிய இலங்கை அணி ஸ்கோர் 51ஐ எட்டியபோது முதல் விக்கெட்டை இழந்தது.

ஜெயசூரிய 26 பந்துகளில் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததையடுத்து அத்தபத்து களமிறங்கினார்.

ஸ்கோர் 127ஐ எட்டும்வரை அடுத்த விக்கெட்டை வீழ்த்தமுடியாது பங்களாதேஷ் அணி தடுமாறியது. இரண்டாவது விக்கெட்டாக தரங்க 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து சங்கஹார களமிறங்கினார். ஆனால், அவர் 22 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அடுத்து ஜெயவர்த்தன களமிறங்கி ஆடத்தொடங்க எதிர்முனையில் நிதானமாக ஆடிக்கொண்டிருந்த அத்தபத்து 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

ஜெயவர்த்தன - ஆர்னோல்ட் ஜோடி ஆட்டத்தைத் தொடர்ந்தது. எனினும் ஸ்கோர் 227ஆக இருந்தபோது - 12 ஓட்டங்களுடன் ஆர்னோல்ட் ரன் அவுட்டானார்.



அடுத்து களமிறங்கிய டில்சான் ஒரே ஒரு ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார்.


இதன்பின் வாஸ் களமிறங்கியபோதும் - அவரால் 16 ஓட்டங்களை மட்டுமே எடுக்கமுடிந்தது. இவர் ஆட்டமிழந்த பின்னர் களமிறங்கிய முரளிதரன் டக் அவுட்டாகி வெளியேறினார்.

ஒன்பதாவது விக்கெட்டுக்கு ஜெயவர்த்தனவுடன் மஃரூப் ஜோடி சேர்ந்தார். ஆனால், ஜெயவர்த்தன கடைசிப் பந்தில் 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 35 பந்துகளில் இவர் 8 பவுண்டரிகளுடன் அரைச் சதத்தை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்களை இலங்கை அணி பெற்றது. இதில் 28 உதிரி ஓட்டங்களாகும்.

பந்துவீச்சில் அப்ரப் அகமட் 2, சையட் ரசல் 2, ரபீக், பாஸ்யா, இஸ்லாம் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.


தொடர்ந்து கடினமான இலக்குடன் பங்களாதேஷ் அணி களமிறங்கியது. இந்த அணி சார்பில் ஷரியர் நபீஸ் மட்டும் அதிகபட்சமாக 39



ஓட்டங்களை எடுத்தார்.

ஜாவிட் ஓமர் 14, அசார் இம்ரான் 6, மொகமட் அஷ்ரபுல் 4, ஹபிபுல் பசார் 14, அப்ராப் அகமத் 2, மஞ்சுரல் இஸ்லாம் 5, மொகமட் ரபீக் 2, சையட் ரசல் 15 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில்




9 விக்கெட்டுக்களை இழந்து பங்களாதேஷ் அணி 181 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் - இலங்கை அணி 88 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

பங்களாதேஷ் அணி சார்பில் காலித் மசூத் 39 ஓட்டங்களுடனும், பாஸ்யா 22 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் மஃரூப் 3, டில்ஹார 2, சந்தன 2, டில்சான் 1 விக்கெட்டை கைப்பற்றினர்.

## சிம்பாப்வே டெஸ்டில் டெண்டுல்கர் இல்லை!



சென்னை —

சிம்பாப்வே அணியுடனான டெஸ்ட் தொடரில் இந்திய அணி வீரர் சச்சின் டெண்டுல்கர் காயம் காரணமாக விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரெனிஸ் எல்போ நோயினால் பாதிக்கப்பட்ட டெண்டுல்கர், இன்னமும் பூரணமாக குணமடையாததாலேயே இந்தத் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.


வலைப்பயிற்சிக்குச் செல்லும் டெண்டுல்கர், நன்றாக துடுப்பு வீசி ஆடுவதில் பிரச்சினைகளை எதிர்கொள்வதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 13ஆம் திகதி தொடங்கும் டெஸ்ட் தொடரில் டெண்டுல்கருக்குப் பதிலாக தீரஜ் யாதவ் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

விளையாட்டு

## 45 லட்சம் ரூபா காதணியுடன் அமெரிக்க ஓபனில் செரீனா!

நியூயோர்க் —



அமெரிக்க ரெனிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் நேற்றுமுன்தினம் யு.எஸ்.ஓபன் ரெனிஸ் முதல் சுற்று ஆட்டத்தில் 6-1, 6-3 என்ற செட் கணக்கில் தாய்வான் வீராங்கனை யங்-சன்சான் என்பவரை வென்றார்.

இந்த ஆட்டம் நடந்தபோது, செரீனா 40 ஆயிரம் டொலர், அதாவது சுமார் 45 லட்சம் மதிப்புடைய வைர காது வளையங்களை அணிந்து விளையாடினார். முதல் செட் ஆட்டம் நடந்துகொண்டிருந்தபோது, அவருடைய வலது காதில் போட்டிருந்த வளையம் கழன்று கீழே விழுந்துவிட்டது. எனவே இடைவேளையின் போது இடது காது வளையத்தையும் கழற்றி வைத்துவிட்டு தொடர்ந்து விளையாடி வெற்றிகண்டார்.

## அவுஸ்ரேலிய அணியிலிருந்து ஹைடனை நீக்கவேண்டும்!

### மைக்கல் ஸ்லேட்டர் கூறுகிறார்

ஓவல் —

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணியில் இருந்து ஹைடனை நீக்கவேண்டுமென்று முன்னாள் தொடக்க ஆட்டக்காரர் மைக்கல் ஸ்லேட்டர் தெரிவித்தார்.

ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்ரேலிய அணி இங்கிலாந்தில் பயணம் செய்து விளையாடி வருகிறது. இந்தப் பயணத்துக்கு முன்பு வரை தலை நிமிர்ந்து நின்ற அவுஸ்ரேலிய அணி, இங்கிலாந்துக்கு சென்ற பின்னர், சறுக்கலுக்கு மேல் சறுக்கலைச் சந்தித்து வருகிறது.

டெஸ்ட் போட்டித் தொடர் தொடங்குவதற்கு முன்பு அவுஸ்ரேலிய அணி மீது பலத்த எதிர்பார்ப்பு இருந்தது. அந்த அணி 5-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றும் என்று அவுஸ்ரேலிய வீரர் மக்ரா நம்பிக்கை தெரிவித்திருந்தார். அந்த எதிர்பார்ப்பு எல்லாம் தற்போது அவுஸ்ரேலியாவின் தோல்வி மூலம் புஸ்வாணமாகிவிட்டது.

பொதுவாக ஒரு அணி தோல்வியைச் சந்திக்கிறது என்றால் தொடக்க ஆட்டக்காரர்கள்தான் முதன் முதலாக விமர்சனத்துக்குள்ளாவார்கள். அதேநிலைதான் தற்போதும் ஏற்பட்டுள்ளது. இந்தமுறை விமர்சனத்துக்கு உள்ளாகி இருப்பவர் அவுஸ்ரேலிய தொடக்க வீரர் ஹைடன்.

ஹைடனுக்கு எதிராக எதிர்ப்புகள் கிளம்பிய வண்ணம் உள்ளன. ஹைடனை அணியிலிருந்து நீக்க வேண்டுமென்று அவுஸ்ரேலிய முன்னாள் தொடக்க வீரர் மைக்கல் ஸ்லேட்டர் கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது -

ஹைடன் இங்கிலாந்து அணிக்கு எதிராக அந்த நாட்டில் 2001இல் இருந்து மோசமாக ஆடி வருகிறார். குறிப்பாக கடந்த ஒரு ஆண்டாக அவர் மோசமான நிலையிலுள்ளார். 2004ஆம் ஆண்டிலிருந்து இது வரை டெஸ்ட் போட்டியில் ஹைடன் ஒரு சதம்கூட அடித்ததில்லை. இங்கிலாந்துக்கு எதிராக அவுஸ்ரேலியாவின் தோல்விக்கு ஹைடனின் மோசமான ஆட்டமும் முக்கிய காரணமாகும். எனவே அவுஸ்ரேலிய அணியிலிருந்து அவரை நீக்கவேண்டும்.

இங்கிலாந்துக்கு எதிரான 5ஆவது டெஸ்டில் ஹைடனுக்குப் பதிலாக சைமன் கடிச்சைத் தொடக்க வீரராகக் களமிறக்கவேண்டும். அவர் 4 நாள் போட்டிகளிலும், ஒருநாள் போட்டியிலும் சிறப்பாக ஆடிவருகிறார். மேலும் பந்து வீச்சாளர் ஷேன் வட்சனையும் மீண்டும் அணியில் சேர்க்கவேண்டும். அவரை 5ஆவது பந்துவீச்சாளராக பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென ஸ்லேட்டர் கூறினார்.

ஹைடனின் ஆட்டம் குறித்து முன்னாள் டெஸ்ட் கப்டன் சிம் ஹொக்ஸ் கூறுகையில் - ஹைடன் பல சாதனைகளைப் படைத்தவர். கடுமையாக உழைத்து தடுமாற்றத்தைப் போக்கினால், அவர் மீண்டும் நல்ல நிலைக்கு வருவார். இதற்காக ஹைடனை அணியிலிருந்து நீக்க வேண்டியதில்லையெனத் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிரான 4 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள ஹைடன் மொத்தம் 180 ஓட்டங்களை எடுத்துள்ளார். அதிகபட்சமாக 36 ஓட்டங்களை எடுத்துள்ளார்.



## அமெரிக்க ஓபன் ரெனிஸில் ஹெனின், ரொடிக் பரிதாபம்!

நியூயோர்க் —

ரெனிஸ் கிராண்ட்ஸ்லாம் பட்டங்களில் ஒன்றான அமெரிக்க ஓபன் ரெனிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது. தற்போது முதல் சுற்று போட்டிகள் நடந்து வருகின்றன.

இதில் உலகின் முதல்நிலை வீரரான ரோஜர் பெடரர் செக்.குடியரசு வீரர் இவானை 6-1, 6-1, 6-1 என்ற செட்டில் தோற்கடித்தார். 6ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் நிகோலாய் செக்.குடியரசு நாட்டைச் சேர்ந்த தோமஸ் ஷிப்பை 6-2, 6-0, 6-4 என்ற நேர் செட்டில் வென்றார்.

உலகின் 4ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் அன்டி ரொடிக் லக்சம்போர்க் நாட்டு வீரர் முல்லரை எதிர்கொண்டார். இதில் முல்லர் 7-6, 7-6, 7-6 என்ற நேர் செட்களில் அன்டி ரொடிக்கை வீழ்த்தினார். முல்லர் 68ஆவது இடத்தில் இருக்கும் வீரர் ஆவார். அவரிடம் முதல் சுற்றிலேயே தோற்கும் பரிதாபநிலை அன்டி ரொடிக்குக்கு ஏற்பட்டது.

அதுபோல உலகின் 12ஆம் நிலை வீரரான இங்கிலாந்தைச் சேர்ந்த ஹென்மென் 6-4, 6-2, 6-2 என்ற நேர்செட்டில் ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோவிடம் தோல்வியடைந்தார். முன்னணி வீரரான இவர் முதல் சுற்றிலேயே தோல்வியுற்று வெளியேறியது அனைவரையும் அதிர்ச்சியடையச் செய்தது.

ஆஜென்ரீன வீரர் நல்பாண்டியன், அமெரிக்க வீரர் அலெக்ஸை 6-2, 7-5, 6-4 என்ற செட்டில் தோற்கடித்து 2ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் பிரிவில் உலகின் முதல் நிலை வீராங்கனையான டேவன் போர்ட், சீனாவைச் சேர்ந்த நாலீயை எதிர்த்து ஆடினார். இதில் டேவன் போர்ட் 6-4, 6-4 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்றார்.

அதுபோல 3ஆம் நிலை வீராங்கனை ஜஸ்ரின் ஹெனின் செக்.குடியரசைச் சேர்ந்த சுசானாவை 6-3, 6-0 என்ற செட்டில் வீழ்த்தினார். ரஷ்ய வீராங்கனை எலினா டெமன்ரீவா 7-5, 6-3 என்ற செட்டில் செக்.குடியரசு வீராங்கனை ஷபரோவாவை வென்



றார்.

பிரான்ஸ் வீராங்கனை மேரி பியர்ஸ் சுவிற்சர்லாந்து வீராங்கனை ஷிசென்டர், ரஷ்ய வீராங்கனை - மிஸ்கினா ஆகியோரும் வெற்றிபெற்று 2ஆவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

## கொமன்வெல்த் போட்டியில் கிரிக்கெட் சேர்க்கப்படுமா?

### அடுத்தமாதம் முடிவாகும்

டுபாய் —

2001ஆண்டுநடைபெறும்கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் கிரிக்கெட் இடம்பெறுமா என்பது பற்றி சர்வதேச கிரிக்கெட் சபை அடுத்த மாதம் முடிவுசெய்யும்.

2010 ஆம் ஆண்டு நடைபெறும் கொமன்வெல்த் போட்டியை இந்தியா நடத்தவுள்ளது. இதில் கிரிக்கெட் போட்டியையும் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது. இது பற்றி சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது-

2010 ஆம் ஆண்டு நடைபெறும் கொமன்வெல்த் போட்டியில் கிரிக்கெட்டையும் சேர்க்க வேண்டும் என்று போட்டி அமைப்பாளர்களிடம் இருந்து கோரிக்கை வந்துள்ளது.

இது பற்றி ஆலோசிக்க சர்வதேச கிரிக்கெட் சபையின் செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் இது தொடர்பாக முடிவு எடுக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்க தலைமையகத்துக்கு தடையின்றி சென்றுவர அனுமதி பெற்றுத்தர வேண்டும்

## சங்கத் தலைவர் அரச அதிபரிடம் கோரிக்கை

தெல்லிப்பளை —

உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அகப்பட்டுள்ள தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்துக்கும், மொத்த விற்பனை நிலைய களஞ்சியத்துக்கும், அங்கத்தவர்கள், பாவனையாளர்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல் காரர்கள் சென்றுவர மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி கிடைத்திருந்தாலும், கிராமிய வங்கிக்கு ஓய்வூதியகாரரர்கள், வாடிக்கையாளர்கள் தடையின்றிச் சென்றுவர அனுமதி பெற்றுத் தருமாறு மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடித்தில் -

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இரு தசாப்தங்களாக பலமுறை, பல இடங்களுக்கு இடம் பெயர்ந்தமையால் பாரிய நட்டத்தை அடைந்துள்ளது. தற்போது சங்கத் தலைமைக்காரியாலயம், மொத்த விற்பனவு களஞ்சியம், கிராமிய வங்கி ஆகியன உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்த சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

இந்தச் சங்க தொழிற்பரப்பில் மக்கள் மீளக்குடியமர இன்னமும் அனுமதிக்கப்படவில்லை. இந்த அவலநிலையை நீக்கி மக்கள் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோருகிறோம். முழுமையாக அனுமதிக்க முடியா விட்டால், பகுதி பகுதியாகவாவது அனுமதிப்பதை மனித நேயம் படைத்த அனைவரும் ஏற்றுக்கொள்வர் என நம்புகிறோம்.

இந்த விடயத்தில் யாழ். அரசாங்க அதிபர் இயன்ற உதவியைச் செய்து தருவார் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் பொறுமை காத்து நிற்கிறார்கள்.

தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் யுத்த அனர்த்தத்தால் இடத்துக்கு இடம் மாறியமையால், கட்டடங்களை இழந்து, பொருட்களை இழந்து, தளபாடங்களை இழந்து பல கோடி பெறுமதியான பணத்தை இழந்து மீள முடியாத கஷ்டத்தை அனுபவித்து வருகிறது. இந்த நட்டத்துக்கு நட்ட ஈடு வழங்க ஆவன செய்ய வேண்டும்.

இந்தச் சங்கத்தின் பணியாளர் இடப்பெயர்வினால் வீடு வாசல்களை இழந்து, சொத்துக்களை இழந்து, இரவல் வீடுகளிலும், முகாம்களிலும் வாழ்ந்து வருகிறார்கள். இதனால் சொல்லொணாத்துன்பங்களை அனுபவித்துக்கொண்டும், மனவிரக்தி அடைந்தும் இருக்கிறார்கள். இவர்களில் சிலருக்கு வீடுகளை இழந்தமைக்கு நட்டஈடும் கிடைத்திருக்கிறது. கிடைக்காதவர்கள் மனவேதனை அடைந்துள்ளார்கள். ஆகவே இந்தச் சங்கத்தின் எல்லாப் பணியாளர்களுக்கும் நட்ட ஈடு பெற்றுத் தர அரசாங்க அதிபர் ஆவன செய்து உதவ வேண்டும். அவ்வாறு நட்ட ஈடு உடனடியாக பெற்றுக் கொடுக்க முடியாவிட்டால், இவர்களுக்கு வீட்டு வாடகை பணத்தையாவது பெற்றுத் தருமாறு அரசாங்க அதிபரிடம் விநயமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தச் சங்கம் கிளைகளை இழந்து வாடகை கட்டடத்தில் இயங்கி வருவதால், இந்தச் சங்கத்தின் சொந்தக் கிளைக் கட்டடங்களுக்கு வாடகைப் பணமாவது பெற்றுத்தருமாறு கோருகிறோம்.

இடப்பெயர்வினால், சொந்தக் கட்டடம், பொருட்கள் அனைத்தையும் இழந்த இந்தச் சங்கம் மீளக் கட்டியெழுப்பக் கைகொடுத்துதவுமாறு கோருகிறோம்.

தற்போதைய சூழ்நிலையில் எரிபொருள் விலை அதிகரிப்பாலும், சம்பள அதிகரிப்பாலும், காகிதாதி, ஏற்றுக்கூலி போன்றவற்றின் அதிகரிப்பாலும் இந்தச் சங்கம் பாரிய நட்டத்தை அடைந்து வருகின்றது. உயர்பாதுகாப்பு வலய நெருக்கடியால் துன்பப்படுகின்ற இந்தச் சங்கத் துக்கு ஏதாவது வழியில் உதவி புரியுமாறு கேட்டுக்கொள்கிறோம். அந்த முறையில் தற்பொழுது சேவைக் கட்டணமாக வழங்கப்படுகின்ற 2ரூபாவை, 3ரூபாவாக உயர்த்தித் தருமாறு கோருகிறோம்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கீரிமலை, தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலை ஆகிய இடங்கள் இந்தச் சங்கத்தின் தொழில் பரப்பில் அமைந்துள்ளமையாலும், முன்னர் இந்தச் சங்கமே இந்த இடங்களில் கிளைகளை அமைத்து பொது மக்களுக்கு உரிய சேவையைச் செய்து வந்தமையாலும், இந்தச் சங்கமே கீரிமலையிலும், தெல்லிப்பளை அரசினர் வைத்திய சாலையிலும் கிளைகள் அமைத்து மக்களுக்குத் தேவையான சேவையைச் செய்ய அனுமதி பெற்றுத் தருமாறு அரசாங்க அதிபரைக் கோருகின்றோம். தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் இந்தச் சங்கம் சொந்தப் பணத்தில் கட்டடம் அமைத்து வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள், பார்வையாளர்கள் ஆகியோருக்கு சேவை செய்து வந்தமையை இந்தச் சந்தர்ப்பத்தில் கவனத்தில் கொள்ளுதல் பொருத்தமானதாக அமையும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சொற்பொழிவு நிகழ்வு

இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் நடத்தும் சொற்பொழிவு நிகழ்வு நாளையும், நாளைமறுதினமும நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அபிவிருத்தி உதவியளர் தி. பிரததீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தச் சொற்பொழிவு நிகழ்வில் - தேரின் மகிமை எனும் தலைப்பில் கந்த சத்திய தாஸன் நாளை சொற்பொழிவு நிகழ்த்துவார்.

நாளைமறுதினம் நடைபெறவுள்ள சொற்பொழிவு நிகழ்வில் 'ஆலய வழிபாடு' எனும் பொருளில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் பாலஷண்முகன் உரை நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் உரிய வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு வாலிபர் முற்போக்குச் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் ஆரியகுளம் வாலிபர் முற்போக்கு சங்க நிலையத்தினர் சங்கத்தை மீள்புனரமைப்புச் செய்வதற்குரிய வசதிகளை ஏற்படுத்தி தருமாறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும், இதுவரையும் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை என கவலை தெரிவித்தனர்.

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் தமது பாவனைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தச் சங்கக் கட்டடமும் அதன் தளபாடங்களும் சேதமாக்கப்பட்டு இருக்கின்றன. 1995ஆம் ஆண்டு காலப்பகுதி தொடக்கம் இராணுவத்தின் பாவனைக்காக பயன்படுத்தப்பட்ட இந்த நிலையம் மக்களின் விடாமுயற்சியின் காரணமாக 2004ஆம் ஆண்டு இராணுவத்திடமிருந்து- மக்களுக்கு வழங்கப்பட்ட போதிலும், கிராம மக்களின் இடப் பெயர்வாலும் வறுமைகாரணமாகவும் இந்தப் பகுதியில் முன்பள்ளி கட்டடம் ஒன்றை அமைக்கமுடியாது இருப்பதாகவும், இந்த மக்களின் நலன் கருதி முன்பள்ளி ஒன்றை அமைத்துத் தரும்படியும் அதற்கான தளபாடம் மற்றும் கற்றல் உபகரணங்களையும் வழங்குமாறு அரச அரச, சார்பற்ற நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்ட போதிலும், இதுவரையும் எந்த வித உதவியும் செய்யாது எமது விடயத்தில் அக்கறையற்று இருப்பதை எண்ணி இந்த மக்கள் கவலை அடைவதாக நிலையச் செயலாளர் தெரிவித்தார்.

## குறுநாடக எழுத்தாக்க போட்டியில் ஸ்கந்தா மாணவிக்கு முதலாமிடம்



உடுவில் —

வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ் மொழித்தின குறுநாடக எழுத்தாக்கப் போட்டியில் கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரி மாணவி செல்வி இமாஜினி வீரவாகு முதலிடம் பெற்று வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டியிலும் முதலிடத்தைப் பெற்று அகில இலங்கை ரீதியிலான போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இவர் பல்வேறு நிறுவனங்களாலும் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளிலும் முதலிடம் பெற்றுள்ளார். வலிகாமம் கல்வி வலயத் திலிருந்து எழுத்தாக்கப் போட்டிக்கு இவர் மட்டும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : தி.சஞ்சீவன்


## சிறாப் திட்டத்தின் கீழ் 3 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் சிறாப் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக மூன்று முக்கிய வீதிகளைப் புனரமைப்பதற்கான மதிப்பீட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

சிறாப் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் புனரமைப்புக்காக யாழ் - கண்டி வீதி, யாழ். காங்கேசன்துறை வீதி, யாழ்.பருத்தித்துறை வீதி, யாழ்.காரைநகர் வீதி, யாழ். ஊர்காவற்துறை வீதி, யாழ்.பலாலி வீதி ஆகிய வீதிகளைப் புனரமைக்க தெரிவு செய்யப்பட்டுள்ளபோதும், தற்போது முதற்கட்டமாக யாழ்.காரை

...புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த வீதிகள் புனரமைப்புப் பணிகளுக்கு மக்களின் பங்களிப்பும் அவசியம். இது தொடர்பாக மக்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நல்லூரில் இசை நிகழ்வு

நல்லூர் கந்தசுவாமி கோவில் இரதோற்சவ, தீர்த்தோற்சவ திருவிழாவை முன்னிட்டு- நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் நடத்தும் இசை நிகழ்வுகள் நாளையும், நாளை மறுதினமும் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெற



... முதலிடம் பெற்று வடக்கு - கிழக்கு மாகாண மட்டப் போட்டியிலும் முதலிடத்தைப் பெற்று அகில இலங்கை ரீதியிலான போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

இவர் பல்வேறு நிறுவனங்களாலும் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளிலும் முதலிடம் பெற்றுள்ளார். வலிகாமம் கல்வி வலயத்திலிருந்து எழுத்தாக்கப் போட்டிக்கு இவர் மட்டும் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது. (101)

# சூரிய மின்கலம் மூலம் புனித நகருக்கு மின் வசதி

பருத்தித்துறை —

பருத்தித்துறை, கற்கோவளம் புனிதநகர் குடியேற்றத் திட்டத்தில் குடியேறியுள்ள சுகாதாரத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு சூரிய மின்கலங்கள் மூலம் மின் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டுள்ளதாக புனிதநகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.சகாயநாதன் தெரிவித்தார்.

பின்தங்கிய பிரதேசமான இந்தப் பகுதிக்கு மின்சார வசதிகள் இன்மையால் கற்றல் நடவடிக்கைகள் உட்பட பல செயற்பாடுகளின்றி பொது மக்கள் சிரமங்களை எதிர் நோக்கி வந்தனர்.

தற்போது இங்குள்ள 48 வீடுகளுக்கும் தலா ஒரு சூரிய மின் கலமும், இரு மின்குமிழ்களும் சர்வோதயம் அமைப்பினரால் பொருத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியம் 48 வீடுகளுக்குமான சூரிய மின் கலங்கள் மற்றும் மின்குமிழ்களை வழங்க சர்வோதயம் அவற்றைக் கொண்டு வீடுகளுக்கு மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. (14)

## யாழ்.செயலகத்துக்கு தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம் —

யாழ்.செயலகத்துக்குப் புதிதாக இரண்டுதொலைபேசிஇணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நலன்கருதி 2233, 2234 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொண்டு பதில் உத்தியோகத்தருடன் தமது தேவைகளைப் பூர்த்திசெய்யலாம்.

இதிலிருந்து 64உள்ளகஇணைப்புகள் பொருத்தப்பட்டுள்ளதாக அரச அதிபர் க.கணேஸ் தெரிவித்தார்.



பெயர் : தி.சஞ்சீவன்
முகவரி : கிளிநொச்சி.

## அகவை இரண்டு



பெயர் : ப.ராகவி
முகவரி : சுன்னாகம்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :



இணைக்கப்பட்டுள்ளன.


பெற்றோர் ஒப்பம்

... கேசன்துறை வீதி, யாழ்.பருத்தித்துறை வீதி, யாழ்.காரைநகர் வீதி, யாழ். ஊர்காவற்துறை வீதி, யாழ்.பலாலி வீதி ஆகிய வீதிகளைப் புனரமைக்க தெரிவு செய்யப்பட்டுள்ளபோதும், தற்போது முதற்கட்டமாக யாழ்.காரை நகர் வீதி, யாழ். ஊர்காவற்துறை வீதி, யாழ்.பலாலி வீதி ஆகியனவே புனரமைக்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட இந்த மூன்று வீதிகளைப் புனரமைப்பதற்கான மதிப்பீடுகளைத் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாணப் பணிப்பாளரிடம் பணிப்

நல்லூர் கந்தசுவாமி கோவில் இரதோற்சவ, தீர்த்தோற்சவ திருவிழாவை முன்னிட்டு- நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் நடத்தும் இசை நிகழ்வுகள் நாளையும், நாளை மறுதினமும் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளன.

காலை 09 மணி முதல், மாலை 03 மணி வரை இடம் பெற வுள்ள இந்த இசை நிகழ்வுகளில் - குழுப் பாடல், திருமுறைக்கச் சேரி, இசைக்கச்சேரி, பக்திப் பாடல், வில்லிசை ஆகிய நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.



மீசாலை வடக்கு பூதவராயர் ஆலய மஹா கும்பாபிஷேகத் தினத்தன்று பார்வதி உடனுறை பரமேஸ்வரருக் குத் திருக்கல்யாண வைபவம் நடைபெறுவதைப் படத்தில் காணலாம்.

# வியாபாரத்துக்கான கொள்வனவுகளில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்கள்

இன்று எமது யாழ்.குடாநாட்டு வுர்த்தக வியாபாரிகளின் வியாபாரங்கள் ஆரம்பத்திலோ அல்லது வியாபார முன்னெடுப்புக்குப் பின்போ தோற்றுப் போவதற்கு முக்கிய காரணங்களாக உள்ளவை கொள்வனவில் உள்ள தவறுகளே ஆகும்.

ஒரு வியாபார முன்னெடுப்புக்கு முக்கியமான அம்சம் "கொள்வனவு வகைப்படுத்தலே". இதனால் அதனை நடைமுறை ரீதியாகச் சற்று அலச வேண்டிய தேவை எமது தொழில் மலர் வாசகர்களுக்கு வேண்டிய ஒன்றாகி விட்டதால், இந்த ஆக்கம் உங்கள் முன் எழுத்துருப் பெறுகிறது. கொள்வனவு என்பதனை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.


**1. வியாபார ஆரம்பக் கொள்வனவு**

**2. படிமுறைக் கொள்வனவு**

இதில் வியாபார ஆரம்பக் கொள்வனவு என்பது ஒரு வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கு முன் மேற்கொள்ளப்படும் பிரதான கொள்வனவாகும். இந்தக் கொள்வனவின்போது வியாபார வகையும் கருத்திற்கொள்ளப்படும். உதாரணமாக ஒரு கடை ஒன்றை ஆரம்பிக்கும் போது, அந்தக் கடைக்குத் தேவைப்படும் வியாபாரப் பொருட்கள் அனைத்தையும் கொள்வனவு செய்யும் போது, இந்தக் கடையானது எந்தத் துறை சார்ந்த வியாபாரமென்பதும் தெளிவாக்கப்பட வேண்டும். ஆகவே ஆரம்பக் கொள்வனவுகளில் கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள் பற்றிச் சிந்திப்போம்.

**வியாபார மையம் பற்றியது**

ஒரு வியாபாரம் இடம் பெறப் போகும் இடமே வியாபார மையம் எனப்படும். இந்த மையமானது எப்படிப்பட்ட இடத்தில் அமைந்துள்ளது. இந்த இடத்தில் உள்ள மக்கள் தொகை எவ்வளவு, இந்த மக்களது பொருளாதாரப் பின்னணி எத்தகையது. இந்த இடத்தில் உள்ள தொழிற்பட்டடை மையங்கள் எத்தனை? அழி பொருட்களா? அழியாப்பொருட்களா? இந்த இடத்தில் அதிகம் விற்பனையாகும் அழி பொருட்களின் முதலீட்டுத் தொகை எவ்வளவு? அழியாப் பொருட்களின் முதலீட்டுத் தொகை எவ்வளவு என்பதைக் கருத்திற் கொண்டு, எந்த வகை சார்ந்த வியாபாரம் முன்னெடுப்பது சிறந்தது என்கின்ற முடிவை அனுமானிக்க வேண்டும். அனுமானித்த பின், பொருட்களை ஆரம்பத்தில் கொள்வனவு செய்யும் போது, மேலும் பல விடயங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.



அன்றாட அத்தியாவசியப் பொருட்களை அதிக அளவில் கொள்வனவு செய்யலாம் . ஏனெனில் அது அன்றாடம் நிச்சயம் விற்பனையாகும், அத்தியாவசிய தேவையற்ற வாடிக்கையாளர்களின் பொருளாதார பின்னணிக்கூடான பொருட்களென சில உண்டு. இவை அனைத்து மக்களாலும் கொள்வனவு செய்யப்பட மாட்டாது.

உதாரணங்கள் - வியாபார வகையீட்டுக்கமைய மாறுபடும். சாதாரணமாக ஒரு பலசரக்குக் கடையை வைத்து நோக்கின், அத்தியாவசியப் பொருட்கள் (சீனி, மா, அரிசி, கடலை, உழுந்து) போன்றவை.

பொருளாதார தேவைக்கூடானவை (ஜாம், யூஸ் வகை, சத்தூட்டும் தேனீர் மா வகைகள்) இப்படியாக அனைத்து மக்களாலும் கொள்வனவு செய்யாத மக்களின் பொருளாதாரத் தேவைக்கூடான பொருட்களை குறைந்தளவில் கொள்வனவு செய்ய வேண்டும்.

**மூலதனத்தொகை ரீதியான பொருட்கொள்வனவு**

சில பொருட்களின் பெறுமதி அதிகமாக இருக்கும். ஆனால், விற்பனைக் குக் காலமெடுக்கும். இப்படியான பொருட்களைக்கொள்வனவு செய்யும்போது, குறைந்தளவே கொள்வனவு செய்யவேண்டும். ஏனெனில் இது மூலதனத்தை முடக்கி விடும், மூலதனத்திற்குரிய வட்டிகள் கூட இன்றி, கடைக்குள் பொருட்கள் முடங்கி இருக்கும்.

இதனால் வேறு பொருட்களால் உண்டாகும் இலாபம் இப்படிப்பட்ட பொருட்கள் மூலம் மொத்த வியாபார இலாபத்தில் தாக்கம் செலுத்த, வியாபாரம் நட்டத்தில் போகும் சந்தர்ப்பமும் உண்டாகும். இதனால் பொருட்களின் பெறுமதியையும், வியாபாரத் தன்மையையும், வாடிக்கையாளர் தேவையையும் அறிந்து கொள்வனவு செய்தல் வியாபாரத்தில் மிக முக்கியமான ஒன்று.

**பொருட்களின் காலாவதித் திகதியையும் கருத்திற்கொள்ளல்**

இதுவும் ஆரம்பகொள்வனவில் இன்றியமையாத ஒன்று. காலாவதி இடைவெளி குறைந்த பொருட்களைப் பெருந்தொகையில் கொள்வனவு செய்வதைத் தவிர்ப்பு சிறந்தது.

இப்படிப்பட்ட நுணுக்கங்களைக் கருத்திற்கொள்ளாது, வியாபார முன்னெடுப்புகளைத் திடீர் திடீரென மேற்கொள்வதால் தான், யாழ்.மாவட்டம் உட்பட பல இடங்களில் பல வியாபாரிகள் தலையில் கை வைக்கும் நிலை உருவாகிறது.

இதனால், இப்படிப்பட்ட வியாபார ஆரம்பக் கொள்வனவு உட்பட படிமுறைக் கொள்வனவு, விலை நிர்ணயத் தன்மை, வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்பு என பல விடயங்களைக் கருத்திற்கொள்ள வேண்டும். இவை பற்றித் தொடரும் தொழில் மலரில் அலசுவோம்.


—ஆர்.கே.மேனன்

# திட்டவட்டமான குறிக்கோள் வெற்றியை ஈட்டித் தரும்



தனின் கண்டுபிடிப்பு அல்ல என்பதை மறந்து விட வேண்டும். பலருக்கு இந்தக் கோட்பாடுகள் பலன் தந்திருக்

தனது சக்தி முழுவதையும் அதில் செலுத்தினார். அசைக்க முடியாத மன உறுதியோடு, கடுமையாக முய



(சென்றவாரத் தொடர்ச்சி)

**உங்கள் தலைவிதியை மாற்றும் கோட்பாடுகள் -**

முதலாவது - திறந்த மனதுடன் தயாராக இருங்கள். இந்தக் கோட்பாடுகள் எல்லாம் ஒரு தனி மனிதனின் கண்டுபிடிப்பு அல்ல என்பதை மறந்து விட வேண்டும். பலருக்கு இந்தக் கோட்பாடுகள் பலன் தந்திருக்கின்றன.

இரண்டாவது - உதாரணம் மூலம் விளக்க முடியும். எட்வின் சி.பார்ன்ஸ் என்பவர் தோமஸ் அல்வா எடிசனைச் சந்திக்கப் புறப்பட்டார்.

மாபெரும் விஞ்ஞானியான எடிசனுடன் வியாபார கூட்டாளியாக வேண்டும் என்ற விருப்பத்தை நிறைவேற்றிக்கொள்ள ஒரு வாய்ப்பை அவரிடமே கேட்பது பார்ன்ஸின் காதுகளில் ஒலித்தது.

பார்ன்ஸின் விருப்பம் வெறும் நம்பிக்கை அல்ல. அது விருப்பமும் அல்ல. அது சுவாசத்தோடு, நாடித் துடிப்போடு இரண்டறக் கலந்து விட்ட தீவிரமான விருப்பம், எந்த அலுவலகத்தில் முதல் முறையாக எடிசனை சந்தித்தாரோ அதே அலுவலகத்தில் அவர் முன்னே நிற்கிறார் பார்ன்ஸ்.

இப்போது அவரின் விருப்பக் கனவு பலித்துவிட்டது. நினைத்தது நிறைவேறிவிட்டது. இன்று அவர் எடிசனின் வியாபாரக் கூட்டாளி. அவர் வாழ்க்கையை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த கனவு நிஜமாகியிருந்தது.

திட்டவட்டமான குறிக்கோளைத் தேர்ந்தெடுத்து, அதை நிறைவேற்றத் தனது சக்தி முழுவதையும் அதில் செலுத்தினார். அசைக்க முடியாத மன உறுதியோடு, கடுமையாக முயற்சி செய்தார். பேச்சு, மூச்சு, சிந்தனை, சொல், செயல் என எல்லாவற்றிலும் அந்தக் குறிக்கோளே வியாபித்திருந்த தால் பார்ன்ஸ் வெற்றிபெற்றார்.

அடங்காத அந்த விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ள ஐந்து வருடம் ஆனது. அவரைத் தவிர எல்லோருக்குமே அவர் எடிசனிடம் உள்ள வியாபார இயந்திரத்தில் உள்ள ஒரு சிறு திருகாணி. ஆனால் பார்ன்ஸோ எடிசனிடம் வேலைக்குச் சேர்ந்த முதல் இருந்தே, ஒவ்வொரு நிமிடமும் தன்னை எடிசனின் கூட்டாளியாகப் பாவித்துக் கொண்டார்.

திட்டவட்டமான விருப்பத்துக்கு எப்படிப்பட்ட ஆற்றல் உள்ளது என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு இது.

எடிசனின் வியாபாரக் கூட்டாளியாக வேண்டும் என்பதைத் தவிர, வேறு எதிலும் நாட்டம் செல்லாத தால் தான் தனது குறிக்கோளில் பார்ன்ஸுக்கு வெற்றி.

அந்தக் குறிக்கோளில் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொள்ளும் ஒரு திட்டத்தைத் தீட்டிக் கொண்டார். தனது விருப்பத்தில் குறியாய் இருந்தார். அது தனது வாழ்க்கை முழுவதும் வியாபித்து தன்னை ஆட்கொண்டு, கடைசியில் நடைமுறைச் சாத்தியமாகும் வரை அவர் வைத்த குறி மாறவேயில்லை.

இதற்கு என்ன காரணம். அவரின் எண்ணங்களுக்கு அப்படி ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை இருந்ததே ஆகும்.



# பெரும்பாலான சிக்கல்களுக்கான தீர்வுகள் அந்தச் சிக்கல்களுக்குப் பின்னாலேயே ஒளிந்து கொண்டிருக்கின்றன...

நாங்கள் தினமும் ஆயிரம் சிக்கல்களில் சிக்கிக் கொண்டிருக்கிறோம். ஆனால் அவையெல்லாம் சிக்கல்கள் என்று தெரியாமல் இருக்கிறோம். சிக்கல்கள் என்ன என்று தெரிந்தால்தானே அவற்றைத் தீர்க்கமுடியும்!

அறிவியலும், மருத்துவமும் வளர்ந்து விட்ட இந்த நாட்களில் ஒரு சில நோய்களைத் தவிர எல்லா நோய்களுக்கும் மருந்து தயாராக இருக்கிறது. ஆனால் என்ன நோய் என்று தெரியாமல் எந்த மருந்தைத் தரமுடியும்?

அதனால் தான் நோயாளி மருத்துவரை அணுகியவுடன் அவர் என்ன நோய் என்பதை முதலில் கண்டறிந்து, பின்னரே மருந்தளிக்கிறார். வள்ளுவர் கூட -

'**நோய் நாடி, நோய் முதல் நாடி அது தணிக்கும்**

**வாய் நாடி வாய்ப்பச் செயல்**' நோயின் தன்மையை முதலில் கண்டறிய வேண்டிய தன் அவசியத்தைக் கூறுகிறார்.

சிக்கலைத் தீர்ப்பதில் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால் நம்மிடமுள்ள கோளாறே நமக்கு எது சிக்கல், ஏன் சிக்கல், எப்படிப்பட்ட சிக்கல் என்று தெரியாமலிருப்பதே!

சிக்கலைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் சிக்கல்களிலேயே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் இறுதி வரை விடிவு காலத்தைக் காணவே இயலாது.

ஆகவே, முதலில் சிக்கல்கள் என்றால் என்ன என்று பார்ப்போம்.

**சிக்கல்கள் என்றால் என்ன?**

சிக்கல்கள் என்பவை... எதிர்பாராதது, விரும்பத்தக்கது, தேவையற்றது, இயல்பு வாழ்க்கையைப் பாதிப்பது, மர்மமானது, புரியாதது, மனச் சுமையைக் கூட்டுவது, உடலுக்கு வேதனையைத் தருவது, பயத்தை ஊட்டுவது, அருவருப்பானது, தெளிவற்றது, புதிரானது, குழப்பத்தையூட்டுவது, நற்பெயரைக் கெடுப்பது, தீமையில் முடிவது, இழப்பைத் தருவது, தீர்வு காணப்பட வேண்டியது.

> **"சிக்கல்களைத் தீர்ப்பதில் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால் நம்முடைய சிக்கலே – எது சிக்கல், ஏன் சிக்கல், எவ்விதமான சிக்கல் என்று புரிந்து கொள்ள முடியாதது தான்!"**

மேற்கூறிய உணர்வுகளுள் எதைத் தூண்டுவதாக இருந்தாலும் அது தான் சிக்கல்.


சிக்கல்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. சிக்கல்களைத் தீர்க்க வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் முதலில் சிக்கல்கள் எங்கே இருக்கின்றன - அவை என்ன மாதிரி சிக்கல்கள் என்று நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**எங்கெல்லாம் சிக்கல்கள் உள்ளன?**

மனதில் சிக்கல், பணத்தில் சிக்கல், உடலில் சிக்கல், உறவில் சிக்கல், காதலில் சிக்கல், குடும்பத்தில் சிக்கல், நாட்டில் சிக்கல், வேலையில் சிக்கல், இருக்குமிடத்தில் சிக்கல், பெற்றோரால் சிக்கல், பிள்ளைகளால் சிக்கல், பிறப்பில் சிக்கல், இறப்பில் சிக்கல், இருந்தாலும் சிக்கல், இல்லாவிட்டாலும் சிக்கல்.

இப்படி நாம் காண்கின்ற ஒவ்வொன்றிலும் சிக்கல்கள் ஒளிந்தும், வெளிப்படையாகவும் இருக்கின்றன.

ஒவ்வொரு மனிதனுமே சிக்கலின் மறு உருவமாக இருக்கிறான். அவன் சந்திக்கின்ற ஒவ்வொரு மனிதனும் சிக்கலாகத் தென்படுகிறான். நாம் விரும்பினால் எதில் வேண்டுமாலும், ஒரு சிக்கலைத் தேடிக் கண்டு பிடிக்க முடியும்.



ஏனெனில் சிக்கல்கள் ஏராளம்!

**ஏன் இந்தச் சிக்கல்கள்? எப்படி வந்தன இந்தச் சிக்கல்கள்?**

இவ்வுலகில் இரண்டு எதிர்மறைப் பொருட்கள் ஒன்றாக இருப்பதுதான் அழகு!

**மனிதனிடம் உள்ள இருபெரும் சக்திகள்** –

நினைவாற்றல் - மறதி.

**உலகை அழகாக்கிக் காட்டுவது** –

இரவு - பகல்.

**உலகில் அழகானவர்கள்** –

ஆண் - பெண்.

**நமக்குத் தேவையான இரு உணர்ச்சிகள்** –

சிரிப்பு - அழுகை.

அறிவு - அறியாமை.

**மனிதனை அடையாளம் காட்டும் குணநலன்கள்** –

பணிவும் - அகம்பாவமும்.

**ஒரு தொழிற்சாலையின் வெற்றிக்குக் காரணம்** –

அழிவும் - உற்பத்தியும்.

இப்படி ஒன்றுக் கொன்று ஒத்து வராத, எதிர்மறைப் பொருட்கள் இணைந்ததுதான் வாழ்க்கை!

இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்!

ஒரு தொழிற்சாலையில் ஒரு பக்கம் மூலப் பொருட்கள் அழியும் போது தான், புதிய பொருட்கள் உற்பத்தியாவதைக் காண முடியும்.

அதே போல் சிக்கல்களும் - தீர்வுகளும் முன்னேற்றம் என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்கள் .

நம்மில் பலர் சிக்கல்களை மட்டுமே பார்க்கிறார்களே ஒளிய, அதன் பின்னாலிருக்கின்ற தீர்வுகளைப் பார்ப்பதில்லை.

'ஊதாரித்தனம் தான் என் சிக்கல்' என்று கூறும் மனிதர்களுக்கு சிக்கனமாக இருப்பது தான் தீர்வு என்று நன்றாகத் தெரியும். இருந்தாலும், இந்தத் தீர்வு பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து தாறுமாறாகச் செலவழித்துக் கொண்டு இருந்தபடியே, 'நான் சிக்கலில் இருக்கிறேன்' என்று சொல்லித் திரியும் மனிதர்களைப் பற்றி என்ன சொல்வது!

பெரும்பாலான சிக்கல்களுக்கான தீர்வுகள் அந்தச் சிக்கல்களுக்குப் பின்னாலேயே ஒளிந்து கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, ஒவ்வொரு சிக்கலுக்குப் பின்னும் ஒன்றல்ல, பல வாய்ப்புகள்!

உங்களுக்கு ஓராயிரம் சிக்கல்கள் என்றால், ஒன்பதாயிரம் வாய்ப்



## அதிகாரிகளுக்கான அறிவுரைகள்



# அறிவுரைகள் இதோ சில...

பொறுப்பில் இருக்கிறீர்களா? யோசித் துக் கொண்டே பொழுது போக்குங்கள். சிக்கல்களில் இருக்கிறீர்களா? பொறுப்புகளைப் பிறரிடம் கொடுத்து விடுங்கள். சந்தேகத்தில் இருக்கிறீர் களா? யாரும் புரிந்துகொள்ள முடியாதபடி கதையுங்கள்

- ஜேம்ஸ் போரேன் -

நல்ல எழுத்தாற்றலும், பேச்சுத் திறமையும் ஒரு நிர்வாகியின் வெற் றிக்குப் பெரிதும் உதவும்.

- ரால்ஃப் ஸேரென்ஸ்-

☆ மனிதனோ, இயந்திரமோ அதிகம் சத்தம் போட்டால், அங்கே செயல் திறன் குறைவு என்று பொருள்

-மேக் - கியர்-

★ ஒரு நல்ல அதிகாரி அல்லது நிர்வாகி எதையும் பொறுமையாகக் கேட்டுக் கொள்ள வேண்டும். ஆராய வேண்டும். கதைப்பதற்கு முன்பு யோசிக்க வேண்டும். இது சொல்வதற்கும், எழுதுவதற்கும் எளிது செயற்படுத்துவது கடினம்.

-ஜெஃப்ரீ அவன்-

❋ எல்லாவற்றையும் நீங்கள் செய்து தான் ஆகவேண்டுமென்பதில்லை. தவிர்க்கப்படும் செயல்பாடுகள் மூலமும் நீங்கள் நிறையவே சாதிக்க முடியும்.

-எட்மண்ட் ப்ரவ்ண்-

♥ ஒன்றைச் செய்வது அல்லது விடுவதனால் எதிர்கொள்ளக் கூடிய இழப்பு ஆபத்து என்ன என்பதை மனதில் கொண்டு எதையும் செய்வது அல்லது செய்யாமல் இருப்பது குறித்து முடிவெடுக்க வேண்டும்.

**உலகில் அழகானவர்கள் -**
ஆண் - பெண்.

**நமக்குத்தேவையானஇருஉணர்ச்சிகள் -**
சிரிப்பு - அழுகை.

**மனிதனை உருவாக்குவது -**
வெற்றி - தோல்வி.

**மனிதனை அழிப்பது -**
செல்வம் - வறுமை.

**மனிதனுக்குத் தேவையான சுவை-**
இனிப்பு - கசப்பு.

**கற்றுக்கொள்ள மனிதனு க்கு தேவை -**




கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, ஒவ்வொரு சிக்கலுக்குப் பின்னும் ஒன்றல்ல, பல வாய்ப்புகள்!

உங்களுக்கு ஓராயிரம் சிக்கல் கள் என்றால், ஒன்பதாயிரம் வாய்ப் புகள் ஒளிந்து கொண் டிருக்கின்றன என்று பொருள்.

ஆனால் இந் தத் தீர்வுகளை யும், வாய்ப்புகளையும் புரிந்து கொள்ள வேண்டுமென்றால் முதலில் சிக்கல் களைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். அதன் பின்னர் அவற்றைத் தீர்ப்பது மிக எளிது!

**“நீங்கள் சந்திக்கும் மிகப் பெரிய சிக்கல் அல்லது இடர்பாடு, பிற்காலத்தில் நீங்கள் வெற்றி பெறுவதற்கும், மகிழ்வாக இருப்பதற்கும் என்ன செய்ய வேண்டும் என்று கற்றுத் தருவதற்கே உங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.”**

- பிரியன் ட்ரேசி-

நன்றி ‘முடிவெடுப்போம் சிக்கல்களை முறியடிப்போம்’

**- தி.க.சந்திரசேகரன் -**

# தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் அனைவரும் உணர்வுடன் பங்கேற்போம்

## - தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணிக்குழு வேளமாலிகிதன் தெரிவிப்பு -

கிளிநொச்சி

கிளிநொச்சியில் இன்று நடைபெறவுள்ள. மாபெரும் தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வுக்கான ஆரம்ப வேலைகள் நிறைவு பெற்றுள்ளன. இதேவேளை - பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வார்கள் என, எதிர்பார்க்கப்படுகிறது என தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணிக்குழு செயலாளரும், கிளிநொச்சி மாவட்ட வெகுஜன ஒன்றியத் தலைவருமான வேளமாலிகிதன் தெரிவித்தார்.

இந்த மாபெரும் எழுச்சி பிரகடனம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிராமங்கள் தோறும் ஏற்பட்டிருக்கின்ற எழுச்சி உணர்வானது, கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வரலாற்று முதன்மையானது. இத்தகைய எழுச்சி - பட்டி தொட்டி எங்கும் அனைத்து மக்களுடைய மனங்களுக்குள்ளிருந்து இவ்வளவு வேகமாக பிறப்பெடுக்குமென்று எதிர்பார்த்திருக்கவில்லை. இத்தகைய உணர்வுபூர்வமான எழுச்சி நிகழ்வு கிளிநொச்சி மாவட்டத்தில் உருவாகியிருக்கிறது. இந்த எழுச்சியின் பின்னால் உள்ள நிலைமையை நோக்கினால் -

தமிழர் வரலாற்றில் பல்வேறுபட்ட காலகட்டத்தில் தமிழ் மக்களுடைய உரிமைப் போராட்டம் கொச்சைப்படுத்தப்பட்டு, அவர்களுடைய கோரிக்கைகள் தூக்கி எறியப்பட்டு வந்துள்ளது. இந்தப் பேரினவாத அரசாங்கத்தினுடைய ஒரு இறுதி வடிவமாகத்தான் கடந்த மூன்றரை ஆண்டுகளாக சமாதானப் பேச்சு வார்த்தைக் காலமும் அமைந்திருந்தது.

இந்தப் பேச்சு வார்த்தைக் காலப்பகுதியில் தமிழ் மக்களுடைய நியாயமான அரசியல் அபிலாஷைகள் பல உதறி எறியப்பட்டுள்ளன.

இடைக்கால நிர்வாக முறைமையாக இருந்தாலும் சரி, சுனாமி பொதுக்கட்டமைப்பாக இருந்தாலும் சரி, ஏதாவதொரு சலுகைக்கான அமைப்பை வளர்க்கக்கூட மறுக்கின்ற இலங்கை அரசு, எவ்வாறு தமிழ் மக்களுடைய உரிமைகளை அவர்களுக்கே வழங்கும் என்பதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியதன் வெளிப்பாடே இந்தத் தமிழ் எழுச்சி நிகழ்வுக்கான தீர்மானம்.

சிங்கள பேரினவாதிகள் சிக்கல் நிறைந்த வரலாற்று நிலைமைக்குள்ளிருந்து, எமது விடுதலைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு நகர்த்த வேண்டிய தேவை தமிழ் மக்களுடைய கைகளிலே விடப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை, உலக தேசிய இனங்களுக்கு வகுத்துள்ள அரசியல் செயற்பாடுகளுக்கு அமைவாக, தமிழ் மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருவதற்கு சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் சபையும் முன்வரவேண்டும் எனக் கூறி, தமிழ் மக்கள் சார்பில் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன் என அவர் கூறினார்.

## - தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வில் -

# வாகனத் தரிப்பிடம் தொடர்பான அறிவிப்பு

கிளிநொச்சி

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெறவிருக்கும் தமிழ் தேசிய எழுச்சி நிகழ்வுக்கு வருகை தருவோருக்கான வாகனத் தரிப்பிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

வாகனத் தரிப்பிடங்களின் விபரம் பின்வருமாறு -

முழங்காவில், அக்கராயன், முறிகண்டி, கனகாம்பிகைக் குளம்,இரணைமடு, ஸ்கந்தபுரம் ஆகிய வீதியால் பயணிக்கும் பஸ், கன்ரர், உழவு இயந்திரங்கள்,ஹையஸ் ஆகிய வாகனங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதான வெளிப்பகுதியிலும் முழங்காவில், அக்கராயன், முறிகண்டி, கனகாம்பிகைக்குளம், இரணைமடு, ஸ்கந்தபுரம் ஆகிய வீதியில் பயணிக்கும் துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியன கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதான உட்பகுதியிலும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் விசேட பிரதிநிதிகள் பயணிக்கும் பஜிரோக்கள், பிக்கப், ஹையஸ் ஆகிய வாகனங்கள் கரைச்சி பிரதேசசபை மைதானத்திலும், ஜெயந்திநகர், திருநகர், உருத்திரபுரம் ஆகிய பிரதேச வீதியால் பயணிக்கும் துவிச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் ஆகியன கிளிநொச்சி முன்பள்ளி வளாகத்திலும் -

வட்டக்கச்சி பிரதேச வீதியால் பயணிக்கும் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள் ஆகியன கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய மைதானத்திலும், வட்டக்கச்சி பிரதேச வீதியால் பயணிக்கும் உழவு இயந்திரம் கிளிநொச்சி பொது போக்கு மண்டப வளாகத்திலும் - பூநகரி, பளை, விசுவமடு, தர்மபுரம், பரந்தன், வடமராட்சி கிழக்கு ஆகிய வீதியால் பயணிக்கும் துவிச்சக் கரவண்டி, மோட்டார் சைக்கிள் ஆகிய வாகனங்கள் கிளிநொச்சி கந்தசாமி கோவில் வளாகத்திலும் - பூநகரி, பளை, விசுவமடு, தர்மபுரம், பரந்தன், வடமராட்சி கிழக்கு ஆகிய வீதியால் பயணிக் கும் பஸ், கன்ரர், உளவு இயந்திரம், ஹையஸ், ஏனைய கனரக வாகனங்கள் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியிலும் வாகனங்கள் தரிப்பதற்கான ஒழுங்குகளை, தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடன செயலணிக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

(ந)

# ராஜ் முன்பள்ளிக்கு அடிக்கல் நாட்டுவிழா

புதுக்குடியிருப்பு

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பிரதேசத்தில் ராஜ் முன்பள்ளிக்கான நிரந்தரக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் விழா - கடந்த திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது. கட்டடத்துக்கான அடிக்கல்லை நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நாட்டி வைத்தார்.

இந்த நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# மணல் மேட்டில் தவித்த 13 தமிழ் அகதிகள் மீட்பு!

மன்னார்

மணல் மேட்டிலிருந்து கடற் படையினரால் மீட்கப்பட்ட 13 இலங்கைத் தமிழ் அகதிகளை, அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிவான் என்.எம்.எம். அப்துல்லா உத்தரவிட்டார்.

தமிழ் நாட்டில் பாம்பன் பகுதியிலிருந்து இந்திய மீன்பிடிப் படகில் கடந்த 27 ஆம் திகதி தலைமன்னார் திரும்பிய இவர்கள், இந்தியப் படகோட்டிகளால் கடலின் நடுவேயுள்ள மணல் மேட்டில் இறக்கிவிடப்பட்டனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட தலைமன்னார் கடற்படையினர் நேற்று முன்தினம் காலை இவர்களை மணல் மேட்டிலிருந்து மீட்டு, தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். இவர்களை மன்னார் நீதிமன்றத்தில் பொலிஸார் ஆஜர்படுத்தியபோதே அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



## காலச் சுவட்டில்...

**செப்ரெம்பர் - 1** | **இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை**

1853 : உலகில் முதன் முதலாக முக்கோண வடிவ முத்திரை நன்னம்பிக்கை முனையில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

1859 : ஜோர்ஜ் புல்மன் என்பவரால் வடிவமைக்கப்பட்ட புல்மன் கார் சிக்காக்கோ - புளூமிங்டன் பாதையில் ஓடவிடப்பட்டது.

1906 : அவுஸ்ரேலிய ஆளுநர், பிரிட்டிஷ் நியூகினியாவை அவுஸ்ரேலியாவின் ஒரு பகுதியாக அறிவித்ததுடன், அதன் பெயரையும் பாப்புவா என மாற்றினார்.

1914 : ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கின் பெயர், பெட்ரோ கிராட் என்று மாற்றப்பட்டது .

1916: அமெரிக்காவில் குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் பொருள்களை மாநிலங்களுக்கு இடையே விற்பனை செய்வதைத் தடை செய்யும் கீட்டிங் - ஓவன் சட்டம் ஜனாதிபதி வில்சனால் பிறப்பிக்கப்பட்டது.

1917: கிழக்கே பால்டிக் பகுதியில் ஜேர்மனியின் ரிகா தாக்குதல் ஆரம்பமாகியது. தாக்குதல் தொடங்கி இரண்டு மணிநேரத்துக்குள் ஏறக்குறைய 11,5000 நச்சுவாயுக் குண்டுகளை வீசியது.

☆: முதன் முதலாக அமெரிக்க விமானப் பயிற்சிப் பாடசாலை இஸ்ஸோடான் என்னுமிடத்தில் தொடங்கப்பட்டது.

1918: ரஷ்யாவில் விமானப்படைப் பிரிவு 315 விமானங்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

☆: களத்திலிருந்து 400,000 ற்கும் மேற்பட்ட தனது படைவீரர்கள் தப்பியோடிவிட்டதாக ஒஸ்ரியா அறிவித்தது.

1919: மொஸ்கோவில் திரைப்படப் பயிற்சிப் பள்ளி தொடங்கப்பட்டது.

1920: சிரியா நாட்டில் லெபனான் என்ற ஒரு மாநிலம் பிரான்ஸால் உருவாக்கப்பட்டது.

1921: இந்தியாவில் கொல்கத்தா நகரில் அந்நிய நாட்டுத் துணிவகைகள் விற்பனை செய்யும் கடைகளின் முன்பு மறியல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

1928: முதலாவது கேலிச் சித்திரங்களுடனான பேசும் திரைப்படம் நியூயோர்க்கில் திரையிடப்பட்டது. ஈசாப்பின் டின்னர் டைம் என்னும் நீதிக்கதையே படமாக்கப்பட்டது.

# கிளிநொச்சியில் பேச்சுக்கு

# கிளிநொச்சியில் பேச்சுநடத்த அரசு தயாராகவே உள்ளது!

## அமைச்சர் டி.எம். ஜெயரத்ன

கிளிநொச்சி

அமைதிப் பேச்சுக்களைக் கிளிநொச்சியில் நடத்தினால், அதில் இலங்கை அரசுத் தரப்பு பங்கு பற்றத் தயாராக இருப்பதாக தபால் தொலைத் தொடர்பு அமைச்சரும், பொதுஜன ஐக்கிய முன்னனியின் செயலாளருமான டி.எம்.ஜயரத்ன அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

முதலில் நோர்வே அரசாங்கத்தினூடாக விடுதலைப் புலிகளுடன் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டு, பின்னர் நேரடியான பேச்சுவார்தைகளைத் தொடங்குவது என்றும் எமதுகட்சி தீர்மானித்துள்ளது.

அதாவது - விடுதலைப் புலிகளுடன் நேரடியான சந்திப்பை நடத்தி, பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதே எமது எண்ணம். இந்தப் பேச்சுவார்த்தைகளை இலங்கையிலோ, வெளிநாடுகளிலோ நடத்த முடியும். விடுதலைப் புலிகள் கிளிநொச்சியில் நடத்த வேண்டும் எனக் கூறினால், நாம் அதற்குத் தயாராக உள்ளோம்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் நாங்கள் விசேட நிபந்தனைகள் எதனையும் விதிக்கவில்லை. காரணம் பேச்சுவார்த்தைகளை இடைநடுவில் இறுக்கிக் கொண்டு, தீர்வு காண்பதைத் தாமதப்படுத்த நாங்கள் விரும்பவில்லை என அவர் மேலும் கூறினார்.

# முல்லைத்தீவில் நிரந்தர வீடமைப்புக்கு வேர்ல்ட்விசன் நிறுவனம் உதவவுள்ளது

முல்லைத்தீவு

முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் - அரச சார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாகப் பாதிக்கப்பட்ட கிராம மக்களாலேயே நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான இடம் துப்புரவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அதில் கள்ளப்பாடு தெற்கு, கோயிற்குடியிருப்பு, வெட்டுவாய்க்கால் (வட்டுவாகல்), முள்ளிவாய்க்கால் மேற்கிலுள்ள சாலம்பன் ஆகிய நான்கு கிராமங்களில் நிரந்தர வீடுகளை வேர்ல்ட்விசன் நிறுவனம் நிறுவவுள்ளது.

அத்துடன் அந்த நான்கு கிராமங்களிலுள்ள மக்களின் பாவனைக்காக 20 மில்லியன் செலவில் வேர்ல்ட்விசன் நிறுவனம் புதிதாக வீதிகளை அமைக்கவுள்ளது என, வேர்ல்ட்விசன் நிறுவன வேலைத்திட்ட இணைப்பாளர் இ.செல்வகுமார் தெரிவித்தார்.

டின்னர் டைம் என்னும் நீதிக்கதையே படமாக்கப்பட்டது.

**1947:** இந்தியா முழுவதும் அகில இந்திய நேரம் என்று ஒரே நேரக் கணிப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

**1951:** அமெரிக்கா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் முத்தரப்புப் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டன.

**1961:** ரஷ்யா திறந்தவெளி அணு ஆயுதப் பரிசோதனைகளை சைபீரியாவில் நடத்த ஆரம்பித்தது.

**1965:** பாகிஸ்தான் படைகள் போர் நிறுத்த எல்லைக் கோட்டைத் தாண்டி, காஸ்மீரில் நுழைந்தன.

**1969:** லிபியாவில் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. மொம்மர் - எல் - கடாபி ஆட்சியைக் கைப்பற்றினார். சோசலிச லிபிய குடியரசு உதய்மானதாக அறிவிக்கப்பட்டது.

**1973:** லிபியா அந்நிய நாட்டு எண்ணெய்க் கம்பனிகளை நாட்டுடமையாக்கியது.

**1980:** தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் காலமானார்.

**1982:** இஸ்ரேல் - பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரச்சினைகளைத் தீர்க்க, மேற்குக் கரையில் வசிக்கும் பலஸ்தீனர்களுக்கு சுயாட்சி கொடுக்கும்படி அமெரிக்க ஜனாதிபதி றேகன், இஸ்ரேலியர்களுக்குஆலோசனை தெரிவித்தார்.

**1988:** ஆப்கானிஸ்தானில் போர் நிறுத்தம் ஏற்பட்டது. ரஷ்யப் படைகள் திரும்பிச் சென்றன.

**தொகுப்பு - சந்துரு**

நமது ஈழநாடு

வைர வரிகள்

தூங்காமை கல்வி துணிவுஉடமை இம்மூன்றும்
நீங்கா நிலன்ஆள் பவற்கு

## நமது நோக்கு

# பொங்கு தமிழின் எழுச்சிப் பிரகடனம்

இன்று கிளிநொச்சி மாவட்டம் புத்தெழுச்சிக் கோலம் கொள்ளவுள்ளது. பொங்கு தமிழனாய்ப் பூரித்தெழும் தமிழுணர்வு, வெங்கள வெற்றிகண்டு வீரம் கொப்பளிக்கும் நிலையில் உள்ள தமிழ்மக்களிடையே - தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்கும், விடிவுக்குமான அறைகூவலை ஓங்கி ஒலிக்கவைக்கும் உணர்ச்சிக்களமாக கிளிநொச்சி மண் இன்று புத்துயிர்ப்புக் கொண்டுநிற்கிறது.

எங்கள் அரசியல் ரீதியிலான உரிமைகளை வென்றெடுக்க - சுயநிர்ணய உரிமையுடன் கூடிய வாழ்வுரிமையை மீட்டெடுக்க - எமது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை மேலும் முனைப்புடன் முன்னெடுக்கும் உரிமையை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டு, அதன் நியாயத் தன்மையை அங்கீகரிக்க முன்வரவேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கையை சர்வதேச சமூகத்துக்கு மீண்டும் ஒருமுறை உரத்த குரலெடுத்துக்கூறும் நோக்கில் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வுப் பிரகடனம் கிளிநொச்சி மண்ணில் ஓங்கி ஒலிக்கவுள்ளது.

சமாதானத்தின் பேரால் தொடர்ந்தும் யுத்தத்தை நியாயப்படுத்தத்துடிக்கும் சிங்களப் பேரினவாதத்தின் இனவெறி - இனிமேலும் அமைதி முயற்சிகள்மீது நம்பிககைகொண்டு காலத்தை வீணடிக்காதே என்ற எச்சரிக்கையை மிகவும் துல்லியமாகத் தமிழ்மக்களுக்கு உணர்த்தியுள்ள நிலையில், தமிழ்மக்கள் தாம ஏமாறும் இனமுமல்ல, ஏமாளிகளுமல்ல என்பதை சிங்கள அரசியல் தலைவர்களுக்கும், சர்வதேச சமாதான சமூகத்துக்கும் மிகத்தெளிவாக - உறுதியான தொனியில் கூறும் நாளாக இன்றைய நாள் அமையப் போகிறது என்றே கூறவேண்டும்.

மூன்றரை ஆண்டுகால சமாதானம் - தமிழ்மக்களின் எதிர்பார்ப்புக்களையோ, அபிலாஷைகளையோ குறைந்தபட்சம் அவர்கள் மண்ணில், அவர்கள் வாழ்வை மீள வேர்விடவைக்கும் உரிமையையோகூட வழங்காது அவர்களை ஏமாற்றிவந்துள்ள நிலையில், உயர்பாதுகாப்புவலய முட்கம்பி வேலிகளுக்குள் சிறைப்பட்டிருக்கும் அவர்களின் வாழ்வியல் சுதந்திரத்தை எந்தவொரு அந்நிய சக்தியாலும் பெற்றுத் தரமுடியாத நிலையே இன்னமும் தொடர்கின்றதென்றால் இந்த அவலத்துக்கான முடிவுதான் என்ன என்ற கேள்விக்கான விடையைக்கூறும் ஆற்றல் இந்த மக்களைத்தவிர வேறெவருக்கும் இல்லை என்றே சொல்லமுடியும்.

அந்தப் பதிலாகவே தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனம் அமையப்போகின்றதெனலாம்.

நாங்கள் எங்கள் வீட்டிற்குப் போகவேண்டும். நீங்கள் உங்கள் வீட்டிற்குச் செல்லுங்கள் என்ற நியாய பூர்வமான பொங்குதமிழ் பிரகடன வாசகங்கள் உரைத்து நின்ற செய்தியின் நியாயத்தன்மையை சிங்கள ஆட்சித்தலைமைகளோ, சர்வதேச சமாதானத்தை வலியுறுத்தும் நாடுகளோ கருத்தில் எடுத்துச் செயற்படாமையே இந்த நாடு இன்று எதிர்கொள்ளும் அனைத்து நெருக்கடிகளுக்கும் காரணமாகும்.

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# இலங்கையில் சமாதானம் இப்போதைக்குக் கிடையாது!

இலங்கைக்குத் தேவையான முழு இராணுவ உதவிகளையும் வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக இப்பொழுது சீனாவும் தெரிவித்திருக்கிறது. ஜனாதிபதிப் பதவியிலிருந்து ஓய்வு பெறப்போகும் சந்திரிகா அம்மையார் இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி என்ற வகையில் உத்தியோகபூர்வமாகச் சில நாடுகளுக்குக் கடைசியாகச் சென்று வருவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை "நாட்டின் நலன்" கருதி நிறைவேற்றி வருகிறார்.

தம்பி அநுரா புதிய வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற நாளிலிருந்து வெளிநாடுகளிலேயே தங்கிப் பணியாற்றி வருகிறார். இந்தியாவே இலங்கையின் சிறந்த நண்பன் என்றும், காந்தி குடும்பமே சிறந்த நண்பர்களென்றும் அம்மா சிறிமா சாவதற்கு முன் சொல்லியிருந்ததை புதுடில்லியில் நினைவுகூர்ந்தவர் தம்பி அநுரா. சீனா பற்றி அம்மா என்ன சொல்லியிருந்தாரோ தெரியவில்லை. அநுராவும் சொன்னதாகத் தெரியவில்லை என்று நண்பர் பரமசிவம் சொன்னார்.

முழு இராணுவ உதவிகள் என்றால் என்ன மாதிரி? ஆயுதங்கள், படைச்சாதனங்கள், போர்ப் பயிற்சிகள், தகவல் சாதனங்கள் என்று நாட்டின் பாதுகாப்புக்குத் தேவையான எதிரிகளின் படையெடுப்பை முறியடித்துத்தாக்கி முன்னேறி வெற்றியீட்டுவதற்கான சகல உதவிகளையும் சீனா கொடுக்கும் என்று நீர் சொல்லுகிறீரா என்று கேட்டேன்.

ஓமோம் அப்பிடித்தான். இலங்கைக்கு பல நாடுகள் ஆயுதங்களையும் படைச்சாதனங்களையும் கொடுத்துக் கொண்டுதானிருக்கின்றன. நவீன ஆயுதங்களும், நவீன படைச்சாதனங்களும், போர் விமானங்களும் இருக்கின்றன என்று சொல்லித்தான் விடுதலைப் புலிகள் ஒரு

வியட்நாமியருக்கு சாதகமாக ஹோசிமின்னுக்கு உதவியாக சீனா தனது படைகளை அனுப்பும் என்று அமெரிக்கர் கூட எதிர்பார்த்தனர்.

ஆனால், ஒரு சீன இராணுவம் கூட வியட்நாமுக்குள் நுழையவில்லை. இப்போது எந்த ஒரு நாட்டிலும் உள்நாட்டுப்போர் நடந்துகொண்டிருக்கையில் வேறு எந்த நாடும் படைகளை அனுப்பமுடியாது போர்நிறுத்தம் சரியானமுறையில் செய்யப்படுவதற்கும், தாக்குதல்களைத் தடுப்பதற்கும் ஐ.நா அமைதிப்படை மட்டும்தான் பிரச்சினைக்குரிய போர் நடைபெறும் நாட்டுக்குள் செல்லமுடியும் என்று சொன்னேன்.

அது சரி, இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைமூலம் அமைதித்தீர்வு காணப்படவேண்டுமென்று இலங்கையில் சிங்களத் தலைவர்கள் கூறுகின்றனர். இந்தியாவும் பேச்சுவார்த்தைமூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணும்படிதான் சொல்கிறது. பேச்சுவார்த்தைகள் தொடங்கி இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

மீண்டும் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமென்றே இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் கேட்டுக்கொண்டிருக்கின்றன. இந்தச் சமயத்தில்தான் நோர்வே பக்கச்சார்பாக புலிகளுக்காகச் செயற்படுவதாக குற்றம்சுமத்தத் தொடங்கினார்கள்.

இப்பொழுது நோர்வேக்கு எதிராக வெளிவிவகார அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க வெளிப்படையாகவே நோர்வே மீது குற்றம் சுமத்திக்கொண்டிருக்கிறார். இந்த நிலையில் மீண்டும் சமாதானப் பேச்சு நடைபெறுமா? இதற்கான வாய்ப்பு இருக்கிறதா? என்று பரமசிவம் கேட்டார்.

கொள்ளும் அனைத்து நெருக்கடிகளுக்கும் காரணமாகும்.

போர்நிறுத்தம் மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திட்ட அரசோ, அதன் அமுலாக்கத்தைக் கண்காணித்து, நடைமுறைப்படுத்தப்படுவதை துரிதப்படுத்தியிருக்க வேண்டிய ஏற்பாட்டாளர்களோ, தமிழ் மக்களின் பல தசாப்தகால அவலங்களையும், தேவைகளையும் மனிதாபிமான ரீதியில் புரிந்து கொணடு ஒப்பந்த விதிகளை மதித்து நடக்கும் செயற்பாடுகளை விடவும், வேறு விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க முயன்றதன் மூலம் சமாதானத்தின் முக்கிய அம்சங்களை புறந்தள்ளிவைத்தே வந்துள்ளார்கள்.

வீதிகள் திருத்தப்பட்டனவே ஒழிய, தமிழ் மக்களின் தலைவிதி திருத்தப்படவில்லை.

நேரடி யுத்தம் நிறுத்தப்பட்டதேயன்றி, அரசின் நிழல யுத்தம் தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

உயர்பாதுகாப்பு வலயத்தைப் பாதுகாப்பதில் காடடும் அக்கறையை அரசு - தமிழர்களின் உயர் பாதுகாப்பு விடயத்தில் காட்டியதேயில்லை...

படையைப் பலப்படுத்திக்கொண்டு சமாதானக் கடையை நடத்த முயலும் அரசின் அரசியல் வியாபாரத்துக்கு தமிழர்களின் உயிர்களைத் தொடர்ந்தும் காணிக்கையாக்க இனியும் தமிழ்த் தேசியம் அனுமதிக்கப்போவது கிடையாது என்ற செய்தியையே இந்தத் தமிழ்த் தேசிய எழிச்சி மாநாடு உணர்த்தப்போகின்றதெனலாம்.

*267, Navalar Road,*
*Jaffna.*
*T.P. - 021-2225107*
*www.eezhanaadu.com*

நவீன ஆயுதங்களும், நவீன படைச்சாதனங்களும், போர் விமானங்களும் இருக்கின்றன என்று சொல்லித்தான் விடுதலைப் புலிகள் ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தம் செய்து அரசாங்கத்தையும் போர்நிறுத்தம் செய்யுமாறு கேட்டபோது - இலங்கை அதிபர் சந்திரிகா மறுத்து போருக்கு போனார். பின்னர் படைகள் தாக்குப்பிடிக்கமுடியாமல் தோல்வியடைந்தன என்று பரமசிவம் சொன்னார்.

இலங்கைக்கு இப்பொழுது ஆயுதங்களும் படைச்சாதனங்களும் மட்டுமல்ல, புலிகளை எதிர்த்துப் போர் புரிவதற்கு படையினர்தான் வேண்டும். இதைத்தான் ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளில் கட்டுரை எழுதுபவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய வேண்டுமென்று கோருபவர்களும், பயங்கரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க உதவியைக் கேட்கவேண்டுமென்போரும் இந்தியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் படைகள் வந்திறங்கி புலிகள் மீது தாக்குதல் நடத்தவேண்டுமென்றே எதிர்பார்க்கின்றனர். அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்யவேண்டுமென்று இவர்கள் இதே நோக்கத்துடன் தெரிவித்திருக்கின்றனர்.

பாகிஸ்தான் - இலங்கைக்கு எந்த உதவியையும் செய்வதற்கு காத்திருப்பதாக கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் சொன்னதாகச் செய்திகள் வெளிவந்தன. இலங்கையுடன் இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் செய்ய மறுத்தால் பாகிஸ்தானுடன் ஒப்பந்தம் செய்யவேண்டுமென்று சிலர் குரல் கொடுத்தனர். ஊடகங்கள் சிலவும் இப்படித் தெரிவித்தன என்று சொன்னேன்.

இப்பொழுது சீனா முழு இராணுவ உதவிகளும் வழங்குவதற்கு முன்வந்திருப்பதால் சீனா படைகளையும் அனுப்பி இலங்கைக்கு உதவி செய்ய முன்வருமா? என பரமசிவம் கேட்டார்.

வியட்நாம் போர் உச்சக்கட்டத்திலிருந்தபோது வட

கவே நோர்வே மீது குற்றம் சுமத்திக்கொண்டிருக்கிறார். இந்த நிலையில் மீண்டும் சமாதானப் பேச்சு நடைபெறுமா? இதற்கான வாய்ப்பு இருக்கிறதா? என்று பரமசிவம் கேட்டார்.

நோர்வே மீது எவர் குற்றச்சாட்டை சுமத்தினாலும் இலங்கை அரசாங்கமோ, விடுதலைப் புலிகளோ இதுவரை நோர்வேமீது குற்றம் சுமத்தவில்லை. எனவே நோர்வே தனது பொறுப்பிலிருந்து விலகிப்போகும் என்று எதிர்பார்க்கமுடியாது.

இதேசமயம இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் இன்னும் சூடு பிடிக்கத் தொடங்கவில்லை. தேர்தல் பிரசாரத்தில் நோர்வேயை வீட்டுக்கு அனுப்புவோம். விடுதலைப் புலிகளான பயங்கரவாதிகளை உலக வல்லரசுகளைக் கொண்டு ஒழித்துக்கட்டுவோம் என்றெல்லாம் கூச்சலிடுவார்கள். எதுவும் நடக்காது.

ஜனாதிபதித் தேர்தல் முடியும்வரை பேச்சுவார்த்தையுமில்லை, போருமில்லை என்றே சொல்லலாம்: ஆனால் படைத்தரப்பினரும், அரசும் நிழல் யுத்தத்தைத் தொடர்ந்து கொண்டிருந்தால் அதன் முடிவு எப்படி இருக்குமென்று சொல்லமுடியாது. மக்கள் எழுச்சி கொண்டுவிட்டார்கள். அரசும் படைகளும் மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டார்களானால் நல்லது என்று சொன்னேன்.

வெளிநாட்டுப் படைகளைக் கொண்டுவந்து விடுதலைப் புலிகளை அழித்துவிடலாம் என்ற ரீதியில் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் கட்டுரைகளும், தலையங்கங்களும் எழுதி சிங்கள மக்களைத் தவறாக வழிநடத்துகின்றன. இதேசமயம் இந்த நாட்டில் சிங்களவர்களும், தமிழர்களும் இனி ஒற்றுமையாக வாழமுடியாதென்ற நிலையையும் இந்த ஊடகங்கள் ஏற்படுத்தி விடுகின்றன. பிரிந்து வாழ்வதைத்தவிர வேறுவழியில்லை என்ற நிலைக்கு சிங்கள மக்களே வந்துவிட்டால் பிரச்சினை சுலபமாகத் தீர்ந்துவிடும் என்று சொல்லி நடந்தார் பரமசிவம்.

# தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்கு தெரிவானோர் விபரம்

தமிழீழ மீட்புநிதி கடன் மீளளிப்புக்குத் தெரிவுசெய்யப் பட்டவர்களின் விபரங்களை தமிழீழ நிதித்துறை வெளியிட்டுள்ளது.
பிரதேச ரீதியாகத் தெரிவானோர்களின் விபரம் வருமாறு:

தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல் - 2005
நிதித்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்

## தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு
### மூப்படிப்படையில் தெரிவானோர்

நேற்றைய தொடர்ச்சி....

| | | |
|---|---|---|
| 720 | யா/தெ/5461 | திருமதி. பத்தம்மா கோவிந்தன் |
| 721 | யா/தெ/5483 | திருமதி. தங்கரெத்தினம் கனகசுந்தரம் |
| 722 | யா/தெ/5487 | திரு. சின்னட்டி தெய்வேந்திரம் |
| 723 | யா/தெ/5493 | திருமதி. ஆச்சிமுத்து வன்னியசிங்கம் |
| 724 | யா/தெ/5502 | திருமதி.கனகமணி கிருஸ்ணசாமி |
| 725 | யா/தெ/5504 | திரு.தில்லையம்பலம் இராசையா |
| 726 | யா/தெ/5516 | திரு. தம்பிப்பிள்ளை நடராஜா |
| 727 | யா/தெ/5535 | திரு. கதிரேசு தங்கவேலு |
| 728 | யா/தெ/5542 | திரு. மிக்கேல்பிள்ளை அருளானந்தம் |
| 729 | யா/தெ/5544 | திரு. தம்பிஐயா வின்சன் இராசபூவதி |
| 730 | யா/தெ/5551 | திரு. வீரசிங்கம் அருளம்பலம் |
| 731 | யா/தெ/5562 | திருமதி. இலட்சுமிப்பிள்ளை ஆறுமுகம் |
| 732 | யா/தெ/5570 | திருமதி.சின்னப்பிள்ளை முருகன் |
| 733 | யா/தெ/5587 | திருமதி. சரஸ்வதி இராசையா |
| 734 | யா/தெ/5606 | திருமதி. அன்னம்மா பொன்னம்பலம் |
| 735 | யா/தெ/5609 | திரு. செல்லையா சிவபாதசுந்தரமூர்த்தி |
| 736 | யா/தெ/5617 | திரு. சின்னப்பு அல்பிரெட் |
| 737 | யா/தெ/5624 | திரு.சங்கரப்பிள்ளை அருணாசலம் |
| 738 | யா/தெ/5656 | திரு. வல்லிபுரம் பேரம்பலம் |
| 739 | யா/தெ/5669 | திருமதி. அருள்நாயகி இராமலிங்கம் |
| 740 | யா/தெ/5673 | திருமதி. இரத்தினபூபதி இராசரெட்ணம் |
| 741 | யா/தெ/5674 | திரு. கந்தையா செல்வராஜா |
| 742 | யா/தெ/5700 | திருமதி. பேரின்பவதி பாலசுந்தரம் |
| 743 | யா/தெ/5709 | திரு. பூதப்பிள்ளை காசிலிங்ம் |
| 744 | யா/தெ/5723 | திருமதி.இலட்சுமி சுப்பிரமணியம் |
| 745 | யா/தெ/5751 | திரு.யாக்கோப்பு மனுவேற்பிள்ளை |
| 746 | யா/தெ/5755 | திருமதி.சொர்ணம்மா சவிரிமுத்து |
| 747 | யா/தெ/5762 | திரு. இறப்பியேல் பாக்கியநாதர் |
| 748 | யா/தெ/5768 | திருமதி. பராசக்தி முருகையா |
| 749 | யா/தெ/5771 | திருமதி. மகேஸ்வரிதேவி சண்முகநாதன் |
| 750 | யா/தெ/5773 | திரு. முத்துக்குமாரு சிவசுப்பிரமணியம் |
| 751 | யா/தெ/5781 | திரு. அண்ணாமலை பொன்னுத்துரை |
| 752 | யா/தெ/5784 | செல்வி. பாக்கியலட்சுமி சபாரட்ணம் |
| 753 | யா/தெ/5785 | திரு. வேலுப்பிள்ளை பொன்னம்பலம் |
| 754 | யா/தெ/5790 | திரு. சின்னையா சின்னத்தம்பி |
| 755 | யா/தெ/5802 | திரு.பிள்ளையாகுட்டி இராசரட்ணம் |
| 756 | யா/தெ/5804 | திரு. இராசையா சிவராசா |
| 757 | யா/தெ/5807 | திருமதி.மீனாட்சி விசுவலிங்கம் |
| 758 | யா/தெ/5823 | திருமதி.மகேஸ்வரி பஞ்சலிங்கம் |
| 759 | யா/தெ/5824 | திருமதி. புனிதவதி கந்தையா |
| 760 | யா/தெ/5825 | திருமதி. பச்சைநாயகி அம்மா துரைச்சாமிகுருக்கள் |
| 761 | யா/தெ/5829 | திரு.வேலுப்பிள்ளை நாகலிங்கம் |
| 762 | யா/தெ/5840 | திருமதி.இராசம்மா பொன்னம்பலம் |

| | | |
|---|---|---|
| 797 | யா/தெ/6090 | திரு.கணபதிப்பிள்ளை செல்லத்துரை |
| 798 | யா/தெ/6104 | திருமதி.ஞானம்மா மிக்கேல்பிள்ளை. |
| 799 | யா/தெ/6114 | திருமதி. செல்லம்மா கந்தையா |
| 800 | யா/தெ/6117 | திருமதி. தங்கரத்தினம் கதிரேசு |
| 801 | யா/தெ/6131 | திரு. வயிரவன் நவமணி |
| 802 | யா/தெ/6140 | திரு. கந்தையா நடராசா |
| 803 | யா/தெ/6142 | திரு.வல்லிபுரம் செனகரத்தினம் |
| 804 | யா/தெ/6151 | திரு. சடாசிவம் பொன்னம்பலம் |
| 805 | யா/தெ/6165 | செல்வி.கனகம்மா அப்பாக்குட்டி |
| 806 | யா/தெ/6166 | திருமதி. பவளரத்தினம் வேலுப்பிள்ளை |
| 807 | யா/தெ/6170 | செல்வி. ஜெகசோதி செல்லப்பா |
| 808 | யா/தெ/6185 | திரு.கந்தையா மாணிக்கவாசகா |
| 809 | யா/தெ/6187 | திருமதி.கண்மணி சுப்பிரமணியம |
| 810 | யா/தெ/6192 | திரு.சுப்பிரமணியம் செல்லத்துரை |
| 811 | யா/தெ/6197 | திரு. ஐயம்பிள்ளை இளையதம்பி |
| 812 | யா/தெ/6207 | திரு. சின்னட்டி மூத்ததம்பி |
| 813 | யா/தெ/6213 | திரு. வயித்திலிங்கம் குமாரசிங்கம் |
| 814 | யா/தெ/6216 | திருமதி. நல்லம்மா தம்பையா |
| 815 | யா/தெ/6218 | திருமதி. மகேஸ்வரி இராசா |
| 816 | யா/தெ/6233 | திரு.பண்டாரம் வினாயகமூர்த்தி |
| 817 | யா/தெ/6241 | திருமதி. நாகம்மா சோமசுந்தரம் |
| 818 | யா/தெ/6242 | திருமதி. லீலாவதி சுந்தரராசா |
| 819 | யா/தெ/6247 | திருமதி.சரஸ்வதி சுந்தரமூர்த்தி |
| 820 | யா/தெ/6249 | திரு. கந்தவனம் குருநாதன் |
| 821 | யா/தெ/6258 | திரு. நாகலிங்கம் கதிரவேலு |
| 822 | யா/தெ/6260 | திரு. நல்லதம்பி செல்வராசா |
| 823 | யா/தெ/6264 | திரு. குமாரவரோதயர் சிவகடாட்சம்பிள்ளை |
| 824 | யா/தெ/6278 | திரு. ஐயம்பிள்ளை செல்லையா |
| 825 | யா/தெ/6279 | திருமதி.இரத்தினம் சின்னத்தம்பி |
| 826 | யா/தெ/6282 | திருமதி. மாணிக்கம் இராசன் |
| 827 | யா/தெ/6286 | திரு.பழனியப்பா இராமச்சந்திரன் |
| 828 | யா/தெ/6297 | திரு.வயித்திலிங்கம் கனகசபை |
| 829 | யா/தெ/6300 | திருமதி. சௌபாக்கியகௌரி அம்பாள் ஏரம்பமூர்த்தி |
| 830 | யா/தெ/6301 | திரு. சிவசாமி தாமோதரம் |
| 831 | யா/தெ/6320 | திரு.வையிரமுத்து காசிப்பிள்ளை |
| 832 | யா/தெ/6325 | திருமதி. தெய்வி செல்லன் |
| 833 | யா/தெ/6327 | திருமதி.தங்கமுத்து நாகலிங்கம் |
| 834 | யா/தெ/6342 | திரு.நமசிவாயம் நாராயணமூர்த்தி |
| 835 | யா/தெ/6343 | திருமதி. பராசக்தி சின்னையா |
| 836 | யா/தெ/6348 | திரு.இளையதம்பி செல்லத்துரை |
| 837 | யா/தெ/6357 | திருமதி.அன்னம்மா அந்தோனிமுத்து |
| 838 | யா/தெ/6376 | திருமதி. சிவபாக்கியம் திருநாவுக்கரசு |
| 839 | யா/தெ/6379 | திரு. தம்பிமுத்து சபாரத்தினம் |
| 840 | யா/தெ/6395 | திரு. வீரகத்தி நாகமணி |
| 841 | யா/தெ/6408 | திரு. பொன்னர் வைத்திலிங்கம் |
| 842 | யா/தெ/6428 | திரு. சின்னத்தம்பி சின்னையா |
| 843 | யா/தெ/6431 | திரு. வல்லி சின்னத்தம்பி |
| 844 | யா/தெ/6448 | திருமதி. விசாலாட்சி சதாசிவம் |
| 845 | யா/தெ/6455 | திரு. முருகன் வடிவேலன் |
| 846 | யா/தெ/6471 | திரு.பொன்னுத்துரை இராசசிங்கம் |
| 847 | யா/தெ/6488 | திரு. முத்தையா நல்லரத்தினம் |
| 848 | யா/தெ/6498 | திரு. சுந்தரம் நாகலிங்கம் |
| 849 | யா/தெ/6500 | திரு. சின்னத்துரை விசுவநாதன் |
| 850 | யா/தெ/6507 | திரு. நல்லதம்பி நடராசா |
| 851 | யா/தெ/6512 | திரு.சங்கரப்பிள்ளை சோதிமயம் |
| 852 | யா/தெ/6526 | திருமதி.லீலாவதி சிறினிவாசன் |

## தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு
### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

| | | |
|---|---|---|
| 1 | யா/தெ/18 | செல்வி. இராசலட்சுமி சின்னையா |
| 2 | யா/தெ/422 | திருமதி. லலிதாதேவி |
| 27 | யா/தெ/2981 | திரு. வயிரமுத்து சிவராசா |
| 28 | யா/தெ/3069 | திரு. சுப்பிரமணியம் சிவராசா |
| 29 | யா/தெ/3199 | திரு. நடராஜா நரேந்திரன் |
| 30 | யா/தெ/3216 | திருமதி. சந்திரவதனா செல்லத்துரை |
| 31 | யா/தெ/3272 | திரு. வேலுப்பிள்ளை தெய்வேந்திரம் |
| 32 | யா/தெ/3316 | திரு. இளையவன் கிருஷ்ணர் |
| 33 | யா/தெ/3436 | திருமதி.விவியான லூர்த்துராணி அல்பிறட்மதுரநாயகம் |
| 34 | யா/தெ/3462 | திரு. வைத்திலிங்கம் கந்தசாமி |
| 35 | யா/தெ/3641 | திரு. வல்லிபுரம் கருணாகரன் |
| 36 | யா/தெ/3643 | திரு. சபாபதி உதயகரன் |
| 37 | யா/தெ/3680 | திரு. கோவிந்து இரத்தினசிங்கம் |
| 38 | யா/தெ/3748 | திரு. சிங்கராஜா அகபிற்றுஸ் நவதுரை |
| 39 | யா/தெ/3814 | திருமதி. சோதிப்பிள்ளை பாலச்சந்திரன் |
| 40 | யா/தெ/3972 | திரு. செல்லையா சிவராசா |
| 41 | யா/தெ/4060 | திருமதி. கலைமாமணி கருணானந்தன் |
| 42 | யா/தெ/4135 | திரு. நடராசா சிவராசா |
| 43 | யா/தெ/4235 | திரு. கணபதி முருகேசு |
| 44 | யா/தெ/4568 | திரு. கந்தையா தங்கராசா |
| 45 | யா/தெ/4593 | திருமதி. புஸ்பம் வேலன் |
| 46 | யா/தெ/4743 | திரு. பொன்னையா சிவபாலன் |
| 47 | யா/தெ/4866 | திருமதி. சகு இரவீந்திரன் |
| 48 | யா/தெ/4877 | திரு. முருகன் கந்தையா |
| 49 | யா/தெ/4886 | திரு. நாகரத்தினம் இரத்தினவேல் |
| 50 | யா/தெ/5187 | திருமதி. மேரிதவராணி ஞானேந்திரா |
| 51 | யா/தெ/5295 | திரு. சின்னத்தம்பி முத்துச்சாமி |
| 52 | யா/தெ/5605 | திரு. தம்பிமுத்து நகுலேஸ்வரன் |
| 53 | யா/தெ/5640 | செல்வி. ஜெயவதனி நீக்கலஸ் |
| 54 | யா/தெ/5678 | திரு.நடேசு ஐயர் தியாகராசஐயர் |
| 55 | யா/தெ/5836 | திரு. அருமைநாயகம் அன்ரன் செல்வராசா |
| 56 | யா/தெ/5857 | திருமதி.சிவபாக்கியம் நவரத்தினம் |
| 57 | யா/தெ/5927 | திரு. ஆறுமுகப்பிள்ளை பாலசுப்பிரமணியம் |
| 58 | யா/தெ/5977 | திரு. சரவணமுத்து இராமநாதன் |
| 59 | யா/தெ/6137 | திரு. வேலுப்பிள்ளை தம்பிராசா |
| 60 | யா/தெ/6148 | செல்வி. கிளேயாநிலானி யேசுதாசன் |
| 61 | யா/தெ/6183 | திரு. வேலு செல்லப்பா |
| 62 | யா/தெ/6384 | திருமதி.மங்களேஸ்வரி குலசிங்கம் |
| 63 | யா/தெ/6387 | திரு. கந்தையா இந்திரசேகரம் |
| 64 | யா/தெ/6398 | திரு. பாலசிங்கம் குமாரசிங்கம் |
| 65 | யா/தெ/6503 | திரு.பொன்னம்பலம உமைபாலன் |

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு
### மூப்படிப்படையில் தெரிவானோர்

| | | |
|---|---|---|
| 1 | யா/உ/14 | திருமதி. இராசம்மா சின்னத்துரை |
| 2 | யா/உ/21 | திரு. கந்தையா மயில்வாகனம் |
| 3 | யா/உ/36 | திரு. செல்லப்பா செல்லத்துரை |
| 4 | யா/உ/38 | திருமதி. சொர்ணம்மா உலகசேகரம் |
| 5 | யா/உ/39 | திருமதி. எலிசபெத்ராணி திருச்செல்வம் |
| 6 | யா/உ/41 | திரு. முத்துச்சாமிகுருக்கள் நவநீதஐயர் |
| 7 | யா/உ/61 | திருமதி. அன்னபூபதி கந்தையா |
| 8 | யா/உ/63 | திரு. சின்னத்தம்பி ஈஸ்வரஆனந்தன் |
| 9 | யா/உ/71 | திரு. வைத்திலிங்கம் கந்தையா |
| 10 | யா/உ/73 | திரு. பொன்னம்பலம் கணவதிப்பிள்ளை |
| 11 | யா/உ/81 | திரு. விநாசித்தம்பி மயில்வாகனம் நவரத்தினம் |
| 12 | யா/உ/96 | திரு. [illegible] |

| | | |
|---|---|---|
| 760 | யா/தெ/5825 | திருமதி. [illegible] துரைச்சாமிகுருக்கள் |
| 761 | யா/தெ/5829 | திரு.வேலுப்பிள்ளை நாகலிங்கம் |
| 762 | யா/தெ/5840 | திருமதி.இராசம்மா பொன்னம்பலம் |
| 763 | யா/தெ/5845 | திருமதி.ஞானம்மா சுப்பிரமணியம் |
| 764 | யா/தெ/5863 | திரு. கனகசபை தருமராசா |
| 765 | யா/தெ/5869 | திரு. வடிவேலு சிவசுந்தரம் |
| 766 | யா/தெ/5873 | திரு. முருகேசு சுவாமிநாதன் |
| 767 | யா/தெ/5874 | திருமதி. அன்னம்மா இராசையா |
| 768 | யா/தெ/5880 | திரு.கந்தபிள்ளை கணேசபிள்ளை |
| 769 | யா/தெ/5885 | திரு.இராமசாமி சண்முகசுந்தரம் |
| 770 | யா/தெ/5890 | திரு. ஐயம்பிள்ளை மார்க்கண்டு |
| 771 | யா/தெ/5895 | திருமதி.இராசேஸ்வரி சீனித்தம்பி |
| 772 | யா/தெ/5904 | செல்வி. நாகம்மா கதிர்காமர் |
| 773 | யா/தெ/5916 | திரு. யோவான் அருளானந்தம் |
| 774 | யா/தெ/5921 | திருமதி. கமலாவதி கதிரவேற்பிள்ளை |
| 775 | யா/தெ/5936 | திருமதி. சின்னம்மா கந்தையா |
| 776 | யா/தெ/5940 | திரு.கந்தப்பிள்ளை சுப்பிரமணியம் |
| 777 | யா/தெ/5957 | திருமதி.பரஞ்சோதி இராசரத்தினம் |
| 778 | யா/தெ/5959 | திரு. தம்பு முருகையா |
| 779 | யா/தெ/5970 | திருமதி.அனுக்கிரகவதி இரத்தினம் |
| 780 | யா/தெ/5971 | திரு. ஆறுமுகம் இராசதுரை |
| 781 | யா/தெ/5973 | திரு. கந்தையா கதிர்காமநாதன் |
| 782 | யா/தெ/5981 | திரு. கார்த்திகேசு செல்லையா |
| 783 | யா/தெ/5982 | திரு. முருகையா கனகேந்திரம் |
| 784 | யா/தெ/5987 | திருமதி. லட்சுமி கதிரவேலு |
| 785 | யா/தெ/5990 | திரு. சின்னத்தம்பி நவரத்தினம் |
| 786 | யா/தெ/5997 | திரு. நாகரத்தினம் நடராசா |
| 787 | யா/தெ/6001 | திரு. சவிரி இராயப்பு |
| 788 | யா/தெ/6004 | திருமதி.தங்கம்மா பொன்னம்பலம் |
| 789 | யா/தெ/6020 | திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை |
| 790 | யா/தெ/6031 | திருமதி. நாகம்மா சரவணமுத்து |
| 791 | யா/தெ/6048 | திருமதி.பொன்னம்மா சபாநாயகம் |
| 792 | யா/தெ/6049 | திருமதி. தனலட்சுமி நடராசா |
| 793 | யா/தெ/6057 | திரு. கந்தர் சுப்பிரமணியம் |
| 794 | யா/தெ/6059 | திரு. முருகேசு சிவராசா |
| 795 | யா/தெ/6065 | திரு. நாகரத்தினம் கதிரித்தம்பி |
| 796 | யா/தெ/6082 | திரு. தம்பையா பொன்னுச்சாமி |

| | | |
|---|---|---|
| 1 | யா/தெ/18 | செல்வி. [illegible] சின்னையா |
| 2 | யா/தெ/422 | திருமதி. லலிதாதேவி மயில்வாகனம் |
| 3 | யா/தெ/495 | திரு. இராசதுரை புஸ்பராசா |
| 4 | யா/தெ/874 | திருமதி. பூமலர் தர்மலிங்கம் |
| 5 | யா/தெ/1034 | திருமதி. ஸ்ரீரஞ்சிதாதேவி சண்முகலிங்கம் |
| 6 | யா/தெ/1063 | திரு. சின்னத்துரை புவனேசதாசன் |
| 7 | யா/தெ/1180 | திருமதி. இலட்சுமிப்பிள்ளை சின்னத்தம்பி |
| 8 | யா/தெ/1299 | திரு. சண்முகம் குலசிங்கம் |
| 9 | யா/தெ/1340 | திருமதி. ஜெசிந்தாஇராஜேஸ்வரி தேவதாஸ் |
| 10 | யா/தெ/1485 | திரு.கந்தையா சண்முகரத்தினம் |
| 11 | யா/தெ/1532 | திருமதி.தனபாக்கியம் இராமசாமி |
| 12 | யா/தெ/1712 | திரு.நவரத்தினம் கணேசலிங்கம் |
| 13 | யா/தெ/1755 | திருமதி.புனிதவதி சண்முகலிங்கம் |
| 14 | யா/தெ/1781 | திரு. சின்னக்குட்டி செல்வராசா |
| 15 | யா/தெ/1909 | திரு. நல்லையா பிரபாகரன் |
| 16 | யா/தெ/1938 | திரு. வேலுப்பிள்ளை நடராஜா |
| 17 | யா/தெ/2122 | திருமதி. சிவகெங்காதேவி யோகநாதன் |
| 18 | யா/தெ/2221 | திரு. வல்லியர் பாலசிங்கம் |
| 19 | யா/தெ/2229 | திருமதி. கமலாதேவி ரவீந்திரன் |
| 20 | யா/தெ/2387 | செல்வி. சர்வலட்சுமி சிவபாலரட்ணம் |
| 21 | யா/தெ/2400 | திரு. கணபதிப்பிள்ளை குமாரசாமி |
| 22 | யா/தெ/2565 | திருமதி. ஞானசக்தி சண்முகசுந்தரம் |
| 23 | யா/தெ/2608 | திரு. வேலுப்பிள்ளை பொன்னுத்துரை |
| 24 | யா/தெ/2656 | திரு. குமாரசாமிகுருக்கள் நகுலேஸ்வரக்குருக்கள் |
| 25 | யா/தெ/2691 | திரு. முருகேசு கிருஷ்ணமூர்த்தி |
| 26 | யா/தெ/2966 | திரு. பொன்னுத்துரை மகேந்திரன் |

| | | |
|---|---|---|
| | | [illegible] நவரத்தினம் |
| 12 | யா/உ/96 | திரு. சாமுவேல் சிமியோன் |
| 13 | யா/உ/105 | திரு. விசுவநாதக்குருக்கள் இராமச்சந்திரஐயர் |
| 14 | யா/உ/114 | திருமதி.பாஞ்சாலதேவி செல்வராசா |
| 15 | யா/உ/122 | திருமதி. பரமேஸ்வரி திருநாவுக்கரசு |
| 16 | யா/உ/140 | திரு. ஆறுமுகம் கந்தையா |
| 17 | யா/உ/143 | திரு. சின்னத்துரை கந்தசாமி |
| 18 | யா/உ/146 | திரு. சிந்தாமணி மகேசன் |
| 19 | யா/உ/152 | திரு. வேலாயுதம் இராசரத்தினம் |
| 20 | யா/உ/157 | திரு. சோமசுந்தரம் சபாரத்தினம் |
| 21 | யா/உ/178 | திரு. இளையவர் சுப்பிரமணியம் |
| 22 | யா/உ/182 | திரு. கந்தையா ஏகாம்பரம் |
| 23 | யா/உ/198 | திருமதி. பரமேஸ்வரி கனகசபை |
| 24 | யா/உ/199 | திரு. கந்தையா கனகசபை |
| 25 | யா/உ/201 | திரு. கந்தையா காசிநாதர் |
| 26 | யா/உ/203 | திரு. ஆறுமுகம் கல்யாணசுந்தரேசன் |
| 27 | யா/உ/204 | திரு. கனகசபை கதிரவேல் |
| 28 | யா/உ/206 | திரு. சுப்பிரமணியம் கந்தசாமி |
| 29 | யா/உ/209 | திரு. மயில்வாகனம் கனகசுந்தரம் |
| 30 | யா/உ/228 | திருமதி. பரமேஸ்வரி சிதம்பரநாதன் |
| 31 | யா/உ/234 | திரு. கந்தையா இரத்தினம் |
| 32 | யா/உ/235 | திரு. கந்தையா இராசா |
| 33 | யா/உ/240 | திரு. காசியர் இராசையா |
| 34 | யா/உ/248 | திரு. சின்னத்தம்பி செல்வரட்ணம் |
| 35 | யா/உ/250 | திரு. நாகமுத்து செல்லத்துரை |
| 36 | யா/உ/254 | திரு. சண்முகரத்தினஐயர் சோமாஸ்கந்தசர்மா |
| 37 | யா/உ/270 | திருமதி. செல்வலட்சுமி மண்டலநாயகம் |
| 38 | யா/உ/277 | திரு. மாணிக்கத் தியாகராசா தேவராசா |
| 39 | யா/உ/282 | திரு. சின்னவி தம்பிமுத்து |
| 40 | யா/உ/287 | திரு. மைல்வாகனம் வாமதேவா |
| 41 | யா/உ/291 | திரு. கணபதி முருகுப்பிள்ளை |
| 42 | யா/உ/292 | திரு. கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் |

(தொடரும்)

# வதந்தியால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 1000 இற்கும் மேற்பட்ட மக்கள் பலி!

## ஈராக் தலைநகர் பாக்தாத்தில் சம்பவம்



பாக்தாத் —

ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள பள்ளி வாசலொன்றில் மதச்சடங்கில் ஈடுபட்டிருந்த மக்களிடையே தாக்குதல் நடத்துவதற்காக தற்கொலையாளி ஊடுருவியுள்ளதாக வெளியான தகவலையடுத்து அங்கிருந்தவர்கள், பாதுகாப்புத் தேடி ஓடியதில் 1000 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்ததுடன், மேலும் பலர் காயமடைந்தனர்.

பாக்தாத்தில் கஸிமியா மாவட்டத்திலுள்ள இமாம் மௌசா அல் - காதிம் வழிபாட்டுத் தலத்தில் ஷியா பிரிவைச்சேர்ந்த மதகுரு இமாம் மூசா காகிமின் வருடாந்த நினைவு நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பத்து இலட்சத்துக்கும் மேற்பட்ட யாத்திரீகர்கள் கலந்துகொண்டனர். இவ்வாறு கலந்துகொண்டவர்கள் மீது நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டதுடன், 36 பேர் காயமடைந்தனர். சன நெருக்கடி மிக்க இடத்துக்கு மிக நெருக்கமாக வைக்கப்பட்டிருந்த நான்கு மோட்டார்களிலிருந்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் இடம்பெற்று இரண்டு மணி நேரத்துக்குப் பின்னர், வழிபாட்டுத்தலத்தில் கூடியிருந்த யாத்திரீகர்களிடையே தற்கொலையாளிகள் ஊடுருவியுள்ளதாக வதந்தி பரவியது.



இதனையடுத்து அச்சமடைந்த யாத்திரீகர்கள் அனைவரும் அங்கிருந்து முண்டியடித்துக் கொண்டு திக்றிற் பாலத்தின் வழியாக வெளியேற முயன்றனர். பாரம் தாங்காது திக்றிற் பாலத்தின் ஒரு பகுதி சுவர் இடிந்துவிழுந்ததிலும், சன நெருக்கடி ஏற்பட்டதால் திக்றிற் நதியில் விழுந்தும், நெரிசலில் சிக்கியும் பெருமளவு மக்கள் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்தில் எவ்வளவு பேர் உயிரிழந்தனர் என்பதனை எம்மால் உறுதியாகக் கூறமுடியாது. ஏனெனில் நூற்றுக்கணக்கான உடல்கள் ஆற்றில் உள்ளன. இதனைவிட காயமடைந்தோரின் தொகை பல மடங்காகும். எம்மால் எண்ணிக்கையை கணக்கிலெடுக்க முடியவில்லையென ஈராக் சுகாதார அமைச்சக அதிகாரி ஒருவர் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

இந்த நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம். பாக்தாத் வைத்தியசாலை உயிரிழந்தவர்களின் உடல்களை வைக்க இடமில்லாமல் நெருக்கடியில் தவிக்கிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து ஈராக்கிய அரசாங்கம் மூன்றுநாள் துக்க தினத்தைக் கடைப்



பிடிக்குமாறு அறிவித்துள்ளதாக ஈராக் அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.



அமெரிக்காவில் வீசிய புயல் ஏராளமான கார்களைத் தூக்கி வீசியது. மிசிசிப்பி மாகாணத்தில் இந்தப் புயலுக்கு இடையே கிளார்க் டெர்கிஸ் என்ற வாலிபர் ஒரு சகாசம் நிகழ்த்தினார். அவர் ஒரு போர்வையை விரித்து பிடித்துக்கொண்டு புயல் காற்றில் பராசூட்டில் பறப்பதுபோல பறந்து சென்றார்.




# உலகிலேயே வயது கூடிய நெதர்லாந்து பெண் மரணம்

வொஷிங்டன் —

உலகில் வயது கூடிய பெண்ணான நெதர்லாந்தைச் சேர்ந்த ஹென்டி ரிக்ஜி ஸ்கிப்பர் (வயது 115) நேற்றுமுன்தினம் நித்திரையில் உயிரிழந்தார்.

1880 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் திகதி பிறந்த இவரை ஹென்னி என்றும் அழைப்பர். இவரது கணவரான டிக்வான் 1959 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். இவர்களுக்குப் பிள்ளைகள் இல்லை. இந்தப் பெண் தனது 106 ஆவது வயதில் வெஸ்டர் இம் பகுதியிலுள்ள முதியோர் இல்லத்தில் சேர்ந்து அங்கேயே தங்கினார்.

கடந்த யூன் மாதம் ஹென்னி தனது 115 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இந்த நிலையில் நேற்று முன்தினம் அவர் தூங்கிக் கொண்டிருக்கையிலேயே மரணமடைந்தார். நோய் எதுவுமின்றி தூக்கத்தில் இயற்கையாக, அமைதியாக அவரது உயிர் பிரிந்ததாக முதியோர் இல்ல அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹென்னி மரணமடைந்ததை அடுத்து உலகிலேயே அதிக வயதுடன் வாழும் பெண் என்ற பெருமை அமெரிக்காவைச் சேர்ந்த எலிசபெத் போல்டன் என்ற பெண்ணுக்குக் கிடைத்துள்ளது. இவரும் அமெரிக்காவிலுள்ள முதியோர் இல்லத்தில் 'தங்கியுள்ளார். ஹென்னியைவிட வயதில் 2 மாதம் குறைந்தவர்.

ஹென்னி மரணமடைந்த சில மணிநேரத்துக்குப் பின்னர் இங்கிலாந்தில் புளோரன்ஸ் ரீவிஸ் என்ற பெண் மரணமடைந்தார். இங்கிலாந்திலேயே அதிக வயதுடன் (111) இவர் வாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னரின் மனைவியாவதற்காக

# அரை நிர்வாணமாக நடனமாடிய ஐம்பதாயிரம் இளம் பெண்கள்

ஜோகன்ஸ்பேர்க் —

சுவாசிலாந்து நாட்டு மன்னர் 13 ஆவது மனைவியைத் தேர்ந்து எடுப்பதற்காக, 50 ஆயிரம் பெண்கள் மேலாடை அணியாமல் அரைநிர்வாணத்துடன் நடனம் ஆடினார்கள்.

ஆபிரிக்காவில் உள்ளது சுவாசிலாந்து. இந்த நாட்டில் மன்னர் ஆட்சி நடந்து வருகிறது. இங்கு மன்னராக 3ஆம் எம்ஸ் வாதி இருந்து வருகிறார். 37 வயதான அவருக்கு ஏற்கனவே 12 மனைவிகள் இருக்கிறார்கள். 13ஆவது மனைவியைத் தேர்ந்தெடுப்பதற்காக நடன விழா நடந்தது. அரண்மனை அரங்கில் நடந்த இந்த நடன விழாவில் 50 ஆயிரம் பெண்கள் கலந்துகொண்டனர். அவர்கள் மேலாடை அணியாமல் அரைநிர்வாணமாக நடனம் ஆடினார்கள்.

இந்த விழாவுக்கு மன்னர் புலித் தோல் ஆடை அணிந்து வந்திருந்தார். மன்னரின் கடைக்கண் பார்வை தங்கள் மீது விழாதா என்ற ஏக்கத்தில் அவர்கள் அரங்கில் சுற்றி சுழன்றாடினர்.

இதற்குப் பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது. நாட்டில் 2/3 பங்கு மக்கள் வறுமையில் வாடிக்கொண்டிருக்கும்போது மன்னர் உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வருகிறார் என்று விமர்சகர்கள் குற்றஞ்சாட்டினர். உலகிலேயே மிக அதிகமாக எய்ட்ஸ் நோயாளிகளைக் கொண்ட நாட்டுக்குத் தகுதியான மன்னர்தான் இருக்கிறார் என்றும் விமர்சகர்கள் கூறினர்.

மன்னரின் இந்த நடத்தை பலதார மணத்தை ஆதரிப்பதாகவும் இளம் வயதிலேயே பாலியல் உறவு கொள்வதைத் தூண்டுவதாகவும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

அந்த நாட்டில் உள்ள மக்களில் 40 வீதமானோர் எய்ட்ஸ் நோயுடன் வாழ்வதாகவும் அவர்கள் கூறினர்.

மன்னர் விரும்பியபடி வாழ அவருக்கு உரிமை உள்ளது என்று அந்த நாட்டு மக்களில் சிலர் கூறியுள்ளனர்.

மன்னருக்கு எப்போது தேவையோ அப்போது ஒரு பெண்ணைத் தேர்ந்து எடுத்து மணந்துகொள்கிறார். இது எங்கள் கலாசாரம். இதை மாற்ற முடியாது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

# 7000 நிலக்கரி சுரங்கங்களை சீன அரசாங்கம் மூடுகின்றது!



பீஜிங் —

சீனாவில் அடிக்கடி இடம்பெற்றுவரும் நிலக்கரி சுரங்க வெடிவிபத்தை அடுத்து, அவற்றினை கட்டுப்படுத்துமுகமாக 7000 நிலக்கரி சுரங்கங்களை மூடுவதற்கு சீன அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சீனாவில் பெருமளவு நிலக்கரி சுரங்கங்கள் சட்டவிரோதமாக இயங்குகின்றன. கடந்த காலங்களில் இவை அரசாங்கத்தால் மூடப்பட்டபோதிலும், உடனடியாகவே மீளவும் திறக்கப்பட்டன. இதனால் அரசாங்கம் பெரும் கவலையடைந்துள்ளது.

இந்த நிலக்கரி சுரங்கங்கள் மூடப்படுவதால் பெருமளவானோர் தமது தொழில்களை இழக்க நேரிடுமென சாங்காய் மாகாணத்தைச் சேர்ந்த சுரங்கத் தொழிலாளி லீ வென்கி தெரிவித்தார்.

## பங்களாதேஷ் இராணுவப் புரட்சி சட்டவிரோதமானதெனத் தீர்ப்பு!

டாக்கா —

பங்களாதேஷில் 1975 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி நடந்த ராணுவப் புரட்சியின் போது முதல் ஜனாதிபதி முஜிபுர்ரகிமான் கொல்லப்பட்டார். இந்தப் புரட்சி சட்ட விரோதமானது. அரசியல் சட்டத்துக்கு எதிரானது என்று அந்த நாட்டு உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது.

ராணுவ ஆட்சியின் போது டாக்காவில் உள்ள சினிமா தியேட்டரை இழந்த மசுதுல் ஆலம், அதனை மீண்டும் பெறுவதற்காக ராணுவப் புரட்சியை எதிர்த்து உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். நீதிபதிகள் கைருல்ஹக் பஸ்லேகபீர் ஆகியோர் விசாரித்து இந்தஇராணுவப்புரட்சியையும் அதனால் ஏற்பட்டஆட்சியையும் சட்டவிரோதமானவை என்று தீர்ப்பு கூறினர்.

முஷ்டாக் அகமட் ராணுவ ஆட்சியைப் பிரகடனம் செய்தது சட்டத்தைத் மீறிய செயல் ஆகும். எனவே அந்த ஆட்சிக் காலத்தில் பிறப்பிக்கப்பட்ட சட்டங்களும் உத்தரவுகளும் செல்லாது என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. அபுசகாத் முகமட், ஜியாவுர் ரஃமான் ஆகியோர் ஜனாதிபதி ஆனதும்கூட சட்டவிரோதமானவை என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பை எதிர்த்து அரசு மேன்முறையீடு செய்யும் என்றும் அரசுத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

# அசாருதீனுக்கு கொலை மிரட்டல் பொலிஸ் பாதுகாப்பு அதிகரிப்பு



மும்பை —

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் அசாருதீன் ஹைதராபாத்தில் பாதுகாப்பு நிறைந்த பகுதியான ஜுபிலிஹில்ஸ் என்ற இடத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறார்.

கடந்த 2 வாரங்களாக அசாருதீனுக்கு செல்போனில் தொடர்ந்து கொலைமிரட்டல் வந்தது. இதையடுத்து ஹைதராபாத் பொலிஸ் ஆணையாளர் தினேஷ் ரொட்டியிடம் அசாருதீன் புகார் கொடுத்தார்.

இந்த நிலையில் மராட்டிய மாநில அவுரங்காபாரத்தில் கடந்த வாரம் மர்ம நபரை பொலிஸார் கைது செய்தனர். அவரிடம் நடத்திய விசாரணையில் அசாருதீனுக்கு கொலை மிரட்டல் விடுத்து பணம் பறிக்க முயற்சி செய்து வருவது தெரியவந்தது.

கைதுசெய்யப்பட்டவர் தாவூத் இப்ராகிம் தலைமையிலான மாபியா கும்பலை சேர்ந்தவராக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். பாகிஸ்தான் அல்லது அரபு நாடுகளில் பதுங்கி இருக்கும் தாவூத் இப்ராகிம் உத்தரவுப்படி அசாருதீனை செல்போனில் தொடர்பு கொண்டு தொடர்ந்து கொலை மிரட்டல் விடுத்து வந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

உடனடியாக மராட்டிய பொலிஸ் ஆணையாளர் பசரிகா - ஆந்திர பொலிஸ் ஆணையாளரைத் தொடர்புகொண்டு அசாருதீனுக்கு கொலை மிரட்டல் இருக்கும் தகவலை தெரிவித்தார். இதையடுத்து ஹைதராபாத்தில் உள்ள அசாருதீன் வீட்டுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

துப்பாக்கி ஏந்திய 4 பொலிஸ் அதிகாரிகள் அவருக்கு தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் பாதுகாப்பு இல்லாமல் வெளியே செல்லக்கூடாது என்று அசாருதீனுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது பற்றி உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறும்போது - அசாருதீனை கொலைசெய்ய மாபியா கும்பல் முயற்சிப்பதாக எங்களுக்கு உறுதியான தகவல் வந்தது. இதன் அடிப்படையில் அவருக்கு பலத்த பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இது குறித்து அசாருதீன் தெரிவிக்கையில் -

ஒரு பிரச்சினையும் இல்லை. இதில் யாரும் கவலைப்படவேண்டாம் முழுக்க முழுக்க இது எனது தனிப்பட்ட விடயம் என்றார்.

முன்பு அசாருதீன் மீது கிரிக்கெட் சூதாட்ட புகார் எழுந்தது. இது பற்றி சி.பி.ஐ விசாரணை நடத்தியது. அப்போது சூதாட்ட கும்பலிடம் இருந்து அசாருதீன் பணம்பெற்று மற்ற வீரர்களுக்கும் கொடுத்து ஆட்டத்தின் முடிவை மாற்றியதும், மும்பைநிழல் உலக தாதாக்களுடன் அவருக்கு தொடர்பு இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவரது செல்போன்தொடர்புகள் கண்காணிக்கப்பட்டு வந்தன. கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் அசாருதீனும் அவரது மனைவி சங்கீதா பிஜ்லானியும் நடத்தி வரும் நிறுவனம் பற்றியும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த நிலையில் அசாருதீனுக்கு தாவூத் இப்ராகிம் கும்பல் கொலை மிரட்டல் விடுத்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நமது ஈழநாடு
Nathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

## மட்டக்களப்பில் தொடர்...

பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத் துக்கருகில் றோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மற்றும் இராணுவத்தினர்மீது கைக்குண்டு வீசப்பட்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டபோதிலும், எவருக்கும் எந்தவித பாதிப்பும் இல்லை.

இதேவேளை, மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் நீதிபதிக்கு பாதுகாப்பு வழங்கிச் சென்ற பொலிஸ் வாகனம் மீது சந்திவெளியில் நின்று கைக்குண்டு வீசப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் பொலிஸ் கொன்ஸ்டபிள் சமிந்த காயமடைந்தார்.

மேலும், நேற்றுக்காலை நாவலடி - வாகரை வீதியில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய்க்கு உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் 2 இராணுவச் சிப்பாய்கள் காயமடைந்தனர். ஹேரத் மற்றும் சாந்த ஆகிய சிப்பாய்களே காயமடைந்தவராவர்.

இதற்கிடையில் மட்டக்களப்பு பழைய கல்முனை வீதி கல்டி இராணுவ பொலிஸ் நிலையம்மீது நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைக்குண்டொன்று வீசப்பட்ட போதிலும் அது வெடிக்காத காரணத்தினால் சேதங்கள் எதுவும் இல்லை என்று பொலிஸ் தகவல் தெரிவித்தன.

இதேவேளை, நேற்று நண்பகல் வாழைச்சேனை - பேத்தாளை வீதியில் றோந்துசென்ற படையினர் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இதேவேளை, கிரானிலும் தாக்குதல் சம்பவமொன்று இடம்பெற்றது. இந்தத் தாக்குதல் சம்பவத்தில் படையினருக்கு சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவரவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்தின் விறாஞ்சேனைப் பகுதியில் நேற்று திடீரென தொடர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால், அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

நேற்றுக்காலை 7 மணிக்கு வாழைச்சேனை துறைமுக இராணுவ முகாமில் இருந்து வாழைச்சேனை பொலிஸ் நிலைய பகுதியை நோக்கிச்சென்ற படையினர்மீது இனந்தெரியாதோர் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியதை அடுத்து -

அந்தப் பகுதியில் தேடுதலை நடத்திய பொலிஸார், பெண் ஒருவர் உட்பட மூன்று பேரைக் கைது செய்தனர்.

மக்கள் வைத்தியசாலையைச் சேர்ந்த டொக்டர் பேபின்நாயகம், வாழைச்சேனையைச் சேர்ந்த பிள்ளையார் நல்லரத்தினம் (வயது 43), ஜோர்ஜ் பிரேமினி நல்லரத்தினம் (38) ஆகியோரே கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

## காணாமற்போன...

வீசியதை அடுத்து அங்கு சென்ற கிராமவாசிகளின் தகவலின் பேரில் இறந்தவரின் தந்தை - ஆடைகளை வைத்து தனது மகன் என அடையாளம் காட்டினார்.

வாழைச்சேனை வைத்தியசாலையில் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக சடலம் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

செப்ரெம்பர் 01
உறுதிகொண்ட தமிழர்களின் உணர்வுகளின் சங்கமம்
உலகத் தலைவர்களே எமது உணர்வுகளை அங்கீகரி
தமிழ்த் தேசிய எழுச்சிச் செயலணி

விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன்
ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் நடாத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் 12 பந்து பரிமாற்றங் களைக் கொண்ட
மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள்.
இடம் : யூனியன் விளையாட்டு மைதானம் (ஆனைக்கோட்டை)
விண்ணப்ப முடிவுத்திகதி : 2005.09.06
விண்ணப்பப்படிவம் பெறும் இடங்கள் :
1. கீதா றேடர்ஸ், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டை.
2. ஜொனெக்ஸ் மல்ரி பலஸ் இல. 76 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
3. வைன் றேடர்ஸ், K.K.S Road கொக்குவில் சந்தி.
தொடர்பு இல :- 077 - 6162028
077 - 6645812
[C/4554] செயலாளர்
ஊடக அனுசரணை:- நமது ஈழநாடு

அண்ணா கோப்பி
ANNA INDUSTRY
திருவிழாக்கால விற்பனை நிலையம்
நல்லூரில் நல்லை ஆதீனம் முன்பாக அமைந்திருக்கும் அண்ணா கோப்பி விற்பனை நிலையத்தில் ரூபா 100/- கொடுத்து அண்ணா தயாரிப்புக்களை மலிவு விலையில் பெற்றுக் கொள்வதோடு இனாம் பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
(C/4520)

## நாடு...

கோரிய நூற்றுக்கும் மேற்பட்ட தமிழர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பியதைக் கண்டித்தும் -

விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களைத் தொடங்குமாறு இலங்கை அரசுக்கு ஜேர்மன் அரசு அழுத்தம் கொடுக்குமாறு கோரியும் - இலங்கை அரசபடைகளால் அப்பாவித் தமிழ் மக்கள் கைதுசெய்யப்படுவதை நிறுத்த அழுத்தம்கொடுக்கக்கோரியும் மனுவொன்று கையளிக் கப்பட்டது.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி அங்கு கோஷங்களும் எழுப்பப்பட்டன.

இதேவேளை - இலங்கையில் தற்பொழுது தமிழ் மக்கள்மீது மேற்கொள்ளப்படும் அடக்கு முறைகள் , படுகொலைகள் தொடர்பான செய்திகள் அடங்கிய பிரசுரங்கள் - வெளிவிவகார அமைச்சரின் பிரசார ஒன்றுகூடலுக்கு வருகைதந் திருந்த ஜேர்மனிய மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

## கண்காணிப்புக்குழு..

ஹக்ரப் ஹொக்லன்ட், கண்காணிப்புக்குழுவின் சட்ட ஆலோசகர் மற்றும் மாவட்ட கண்காணிப்புக்குழு பொறுப்பதிகாரி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அண்மைக்காலமாக படையினர் மக்கள் குடியிருப்புக்களைச் சுற்றி வளைத்து திடீர்த் தேடு தல்களையும், கைதுகளையும் மேற்கொள்வது, அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி மக்களின் இயல்புவாழ்க்கயை சீர்குலைப்பதுடன் மீண்டும் யுத்த சூழலை ஏற்படுத்தி வருகின்றனர்.

அத்துடன், இராணுவ நிலைகளைப் பாதுகாப்பது என்ற போர்வையில் அவற்றைப் பலப்படுத்துவதும் பிரதான வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி சோதனைகளை மேற்கொள்வது, மக்கள் மத்தியில் சமாதானம் தொடர்பான நம்பிக்கை சிதைவடைந்து, அரசு மீண்டும் யுத்தத்தைத் திணிக்க எத்தனிக்கின்றதென்ற அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த மாதம் விடுதலைப் புலிகளின் அலுவலகம் தாக்கப்பட்டமையானது எமது அரசியல் பணிக்கு விடப்பட்ட அச்சுறுத்தலாகவே எடுத்துக் கொள்ளப்படவேண்டியுள்ளதென மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இனியவன் கண்காணிப்புக் குழுத் தலைவரிடம் தெரிவித்தார்.

இதன்பின்னர் கண்காணிப்புக் குழுத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் -

மன்னார் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளும் - படையினரும் அடிக்கடி சந்தித்துப் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். நடைமுறையிலுள்ள போர்நிறுத்த ஒப்பந்தத்தை எதர்காலத்தில் சீரமைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.

சமாதான சூழல் தொடர்ந்தும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. தொடர்ந்தும் சமாதான சூழல் நிலைபெறுவதற்கு இரண்டு தரப்பினரும் முன்வரவேண்டுமெனத் தெரிவித்தார்.

## பிரேமதாஸ...

யென சட்டமா அதிபர் தெரிவித்ததையடுத்து இரகசிய பொலிஸார் இந்த விடுதலை தொடர்பாக தமது ஆட்சேபனையைத் தெரிவிக்கவில்லை.

குற்றம் சுமத்தப்பட்டிருந்தவர்களில் 8 பேர் மாத்திரமே நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர். ஏனையோர் அரசாங்க கட்டுப்பாடில்லாத பிரசேத்தில் உள்ளவர்கள் என்பதால் அவர்களை ஆஜர் செய்ய முடியவில்லையென இரகசிய பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

# மீன்பிடிப் படகுகளுக்கான எரிபொருள் பறிமுதல்!

மன்னார்—

தலைமன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து மீனவர்களின் படகுகளுக்கான 2100 லீற்றர் எரிபொருள் எடுத்துச் செல்லப்பட்டபோது பொலிஸார் அவற்றைப் பறிமுதல் செய்தனர்.

கடந்த திங்கட்கிழமை கூட்டுறவுச் சங்க லொறியில் இந்த எரிபொருள் எடுத்துச்சென்றபோது வழிமறித்த பொலிஸார் உரிய ஆவணங்கள் இன்றி எரிபொருட்கள் எடுத்துச்செல்லப்படுவதாகக்கூறி கூட்டுறவுச்சங்க ஊழியர்கள் இருவரைக் கைதுசெய்ததுடன், 2100 லீற்றர் டீசலையும் பறிமுதல் செய்தனர்.

இதையடுத்துக் கைதுசெய்யப்பட்ட ஊழியர்கள் இருவரும் மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி என்.எம். எம்.அப்துல்லா முன்னிலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டனர். இவருவரையும் சொந்தப் பிணையில் நீதிபதி விடுதலை செய்தார். செப்ரெம்பர் 3 ஆம் திகதி இருவரும் நீதிமன்றில் ஆஜராகும்படி உத்தரவிட்ட நீதிபதி பறிமுதல் செய்யப்பட்ட எரிபொருட்களைப் பாதுகாத்து வைக்கும்படி உத்தரவிட்டார்.

தலைமன்னார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் 85 மீன்பிடிப் படகுகளுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுவந்தது. இதன்மூலம் 250 மீனவக் குடும்பங்கள் பயனடைந்தன.

தற்போது 2100 லீற்றர் எரிபொருள் பறிமுதல் செய்யப்பட்டதால் கூட்டுறவுச் சங்கம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இதனால் அந்தப் பகுதி கடற்தொழிலாளர்களின் தொழில் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

## கிளிநொச்சி...

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பேராளர்கள், அறிஞர்கள், கல்விமான்கள், விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்றைய இந்த மாநாடு - வவுனியாவில் கடந்த மாதம் இடம்பெற்ற தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடன மாநாட்டிற்கு வலுச்சேர்ப்பதாக அமையவுள்ளது.

தமிழ் மக்களின் தாயகக்கோட்பாட்டை சர்வதேச சமூகம் அங்கீகரித்து, தமிழர்களின் நிரந்தரமான தீர்வுக்கு வழிசமைக்க வேண்டுமெனக் கோருவதற்கு தமிழர்கள் அணி அணியாக இன்றைய இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு எழுச்சி நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

## வயோதிபரை...

பலாலி வீதி வழியாக நல்லூர் கந்தன் ஆலயத்துக்குச் சென்றுகொண்டிருந்தார்.

மோட்டார் சைக்கிளில் சென்ற இவரை - திருநெல்வேலிச் சந்திப் பகுதியில் வைத்து போக்குவரத்துப் பொலிஸார் சோதனைக்காக மறித்தனர். அந்த நேரத்தில் மேற்படி வயோதிபருக்கு மாரடைப்பு ஏற்பட்டு அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இதையடுத்து அந்தப் பகுதியில் பொதுமக்கள் ஒன்றுகூடினர். பொலிஸார் மற்றும் இராணுவத்தினரும் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டனர்.

எனினும், கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யாழ். நீதிவானுடன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை நடத்திய பின்னர் சடலத்தை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்ல நடவடிக்கை ஏ்டுத்தார்.

## ரத்வத்தவின் பாதுகாப்புக்...

நீதிமன்றத்திலோ, நீதிமன்றத்துக்கு வந்துசெல்லும் வழியிலோ அவரைக் கொலைசெய்வதற்கு ஆயுதக் குழுவினர் திட்டமிட்டுள்ளதால் ரத்வத்த இன்றி உடத்தலவின்ன வழக்கு விசாரணைகளை நடத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபர் சட்டமா அதிபருக்கு அறிவித்திருப்பதாகவும் விஜயதாஸ ராஜபக்ஷ நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

ரத்வத்தவின் பாதுகாப்புத் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை பொலிஸ் மா அதிபர் - சட்டமா அதிபருக்கு அறிக்கை அனுப்பியிருந்தபோதிலும் நேற்றுமுன்தினம் அவ்வாறான ஒரு அறிக்கை பொலிஸ் மா அதிபரால் நீதிபதிகள் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

ரத்வத்தவின் பாதுகாப்பு காரணங்களுக்காக அவரின்றி விசாரணைகளைக் கொண்டுநடத்த அவரின் சட்டத்தரணி அனுமதி கோருவாராயின் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டாமென்று சட்ட மா அதிபர் ஆலோசனை வழங்கியதாக பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் பாலித பெர்ணான்டோ நீதிமன்றத்துக்குத் தெரிவித்தார்.

## தெஹிவளையில் பாரிய...

நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அடையாள அட்டைகள், உறுதிப்படுத்தும் ஆவணங்கள், ஆகியவற்றை சமர்ப்பித்திருந்தபோதிலும் தேடுதலில் ஈடுபட்ட படையினரும், பொலிஸாரும் அப்பாவி இளைஞர்களை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்றதும் சந்தேகத்திற்கிடமான குற்றவாளிகளை குற்றவாளி போல் நடத்தியதுடன் கை விரல் அடையாளங்கள், புகைப்படங்கள், வாக்கு மூலங்கள் ஆகியவற்றை பொலிஸார் பெற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கேள்வியுற்றதும் தெஹிவளை பொலிஸ் நிலையத்திற்குச் சென்ற கொழும்பு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன்- இந்தப் பகுதிக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.பி.பத்திரனவுடன் தொடர்பு கொண்டு பொலிஸ் அத்தியட்சகர் அரசரத்தினத்தின் ஒத்துழைப்புடன் கைதாகியிருந்த இளைஞர்களில் 20 பேரை நேற்றுமுன்தினமிரவு விடுதலை செய்து பொலிஸ் நிலையத்திற்கு வெளியே காத்திருந்த பெற்றோரிடம் ஒப்படைத்தார்.

ஏனைய 8பேரையும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கையையும், அவர் மேற்கொண்டுள்ளார். இதேவேளை, எதிர்வரும் 13ஆம் திகதி வரை அவசர காலச்சட்டம் நடைமுறையில் உள்ளதால் தமிழர்கள் மீது தமது அதிகாரத்தை பயன்படுத்த பாதுகாப்புப் பிரிவினர் முனைப்புடன் செயற்பட்டுக்கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

நல்லைக் கந்தனை தரிசித்துவிட்டு மாங்கோஸிற்கு வாருங்கள்
மாங்கோஸ் சைவ உணவகம்
ஸ்பெஷல்
மரக்கறி புரியாணி
லெமன் சாதம்
தயிர் சாதம்
பூரி
சப்பாத்தி
மசாலா தோசை
நெய் தோசை
வெங்காய தோசை
மாங்கோஸ் ஐஸ்கிறீம்
சாதா தோசை
பரோட்டா
பிரைட் ரைஸ்
நெய் மசாலா
ஸ்வீட்ஸ்
Tel :- 021 - 222 8294
Mobitel :- 0777 684131
nordiccompany@gmail.com
Mango's
FOR GOOD FOOD CAN GO FAR
[C/4547]
359/3, Temple Road,
(கம்பன் கழக முன் ஒழுங்கை)
Nallur,
Jaffna.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.09.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.